சிவமயம்

# சந்திர தீபம்

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும், திருவருள் பூண்டது.

இதழ் - 1 காலயுத்திவருஷம் வைகாசி மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை [26-5-1978] சுடர் - 13

OF SRI LANKA RECEIVED PERIODICALS

## காலன் நம்மைப் பாசமிடப் பார்க்கிறன். ஆனல்
### காலத்தை வருவிக்கும் காலனைப் பாசமிடுகிறர் எங்கள்
# திருநாவுக்கரசர் பெருமான்

உலகில் பெரியோர் என அவதரித்தவர்களில் ஞானசம்பந்தர் நாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கர் திருமூலர் ஆகும் இவர் போல் பெரியவர் எவருமே தோன்றவில்லை. இது அடியேனது எண்ணம் மட்டுமன்று. இருபதாம் நூற்றுண்டில் உலகில் துரிய நிலை கைகூடப் பெற்ற உத்தம ஞானியாகும் கொழும்புத்துறை யோக சுவாமிகளது திருவுள்ளமும் அப்படியே! சிவதொண்டன் நிலையத்தில் பெரியபுராணத்திற்குப் பயன் சொல்லி வருமாறு யோகசுவாமிகள் என்னிடம் தெரிவித்தது. அதன்படி பெரியபுராணத்திற்குப் பயன் சொல்லும் போது அடியேன் யோகசுவாமிகள் அருளிய நற்சிந்தனைப் பாடலினையும் பெரியபுராணப்பாடல் சிலவற்றின் நயங்கட்கு உதாரணமாக எடுத்துக் காட்டி நயம் மொழிந்தேன்.

இது உணர்ந்த சுவாமிகள் ஒரு நாள் என்னைநோக்கி "ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூச் சர்க்கரை என்று சொல்வார்கள். அமுதம் போன்ற அவர்களது திருப்பாடல்களுக்கு எமது பாடலை ஒப்பிட்டுப் பேசமுடியாது. அவர்கள் பாடலிற்கு எக்காலமும் நிகராக யாவர் பாடலுமே இல்லை" என்றுர். அவர் அதை அன்று தெரிவித்தாலும் அவர் வாக்கை அன்று நான் அக்கறை கொள்ளவில்லை. பின்னர் தற்போது பெரியபுராணத்தைச் சம்பந்தர் நாவுக்கரசர் சுந்தரர் எனும் மூவர் முதலிகளின் திருப்பதிகங்களைச் சேரப்பதிப்பிக்கும் போது தான் இவர்களுடைய திருப்பதிக மேன்மை பற்றித் தெரிந்து கொண்டேன். தெரிந்து தெளிந்து கொண்டபின் அதனை உலகறியச் சொல்ல வேண்டு மென்ற அவா தலைப்பட அவர்க்கு ஒரு பத்திரிகை என்ற அளவில் சந்திரதீத்தை ஆரம்பித்தேன்.

மாணிக்கத்தை கஞ்சல் குப்பையிடத்து வைத்தல் நன்றல்ல. சிலர் தாங்கள் பத்திரிகை ஆரம்பித்து அதில் உறுதி காணுத போலியாளரையும் போற்றிக் கொண்டு இவர்களையும் அதற்குள் செருகி பத்திரிகை நடத்திப் பட்டம் கொடுத்து பதக்கம் கொடுத்துப் பாராட்டு விழா வெடுத்து முகப்பில் புகைப் படமும் பிரசுரித்து பலரையும் மருட்டுவது போன்ற செயல் இப் பத்திரிகையில் ஒரு போதும் வராது. சிவன் அருள்தெளிந்து நின்ற அருளாளருடைய வரலாறும் வேதமும் ஆகமமும் மேன்மை கொள் சைவநீதியும் சந்திரதிபப் பத்திரிகையில்தெரிவிக்கப்படுமே ஒழிய கஞ்சல் குப்பையான காதல்கதை நொட்டைக் கதையான எவையும் இப்பத்திரிகை கொள்ளாது.

சுடுபட்டு இறந்தது, அன்றி நோயால் இறந்த சாமியள் கருத்துக்களை அல்லது அவர்கள் பற்றிய வரலாற்று சரிதையை நாங்கள் இதில் பிரசுரம் செய்யோம். மயில் ஆடக்கண்டு வான் கோழியும் வாலைத்தூக்குவது போல் எத்தனையோ சாமியள் வந்து வலாட்டிப் போட்டு போயிட்டார்கள். இன்னும் வாலாட்டுகிறுர்கள். அவர்கள் வாலாட்டத்திற்கு பாராட்டால் கிடைக்குது காசுகிடைக்குது- பத்திரிகையும் படம் போடுது. அந்த வான்கோழிச் சாமியளுக்கு எமது பத்திரிகையில் இடம்வராது. புகைப்படத்தில் தாடி தலப்பா கொண்டை குடுமி எல்லாம் வடிவாய் இருந்தாலும் உலகம் தூக்கி தலையில் வைத்து ஆடிக்காட்டிறுலும் நாம் அவை கண்டு அசையமாட்டோம்.

பிச்சைக்கே இச்சித்த பெருமான் திருவருள் நிறைந்த பெரியோரது திருவடிகளே நமக்கு தஞ்சம். அதற்காக நரகம் புகவேண்டி வந்தாலும் சந்திரதீபம் பிரசுரிப்பாளர்கள் அஞ்சமாட்டார்கள். தமது நெறிநின்றும் தவறமாட்டார்கள். சந்திரதீபப் பிரசுரிப்பாளர் கட்கு இவ்வுலகில் யாருமே பகையில்லை; எல்லோரும் உண்மையை விளங்கி நல்நிலையடையவே தொண்டு கொள்பவர்கள். அவர்கட்கு உலகை சீர்திருத்தும் நோக்கமில்லை. பதில் உண்மையை விளங்கிட வைக்கும் தொண்டுதான் நோக்கம். இதுவன்றி ஏதும் பிறிது ஆசைகள் சந்திரதீபப் பிரசுரிப்பாளரிடம் இல்லை.

இந்த வகையாக திருநாவுக்கரசர் பெருமான் காலத்தை வருவிக்கும் அதாவது மரணத்தை வருவிக்கும் இயமனது தூதுவரிடம் சில கட்டளை செய்கின்றுர். இதுவும் திருப்பூந்துருத்தி திருமடத்தில் இருந்தே அருளிச் செய்கிறுர். காலன் எம்மைப் பாசமிடுகிறது. காலன் பாசத்தை தவறினர் எவரும் இலர். இயமனை அறியாது உயிர் போகாது என்பது பழமொழி. ஆகவே உலகில் பிறந்த எந்த உயிரும் காலன் வலையில் சிக்கியே யாக வேண்டும். கால பாசத்தை மரணிக்கும் உயிர் மீது வீசுபவர் காலனது தூதுவர்கள். அத்தூதுவர்களது கொடுமை சகிக்கமுடியாது. பெரும் அந்தரமான இருளில் அவர்கள் தங்கள் பாசத்தை வீசி உயிரைப் பற்றி பிடித்துப் போகும் கொடுமை எந்த உயிரும் துன்புறும் படியே யாகும். ஆகவே அப்படி பாசம் வீசித்திரியும் தூதுவர்களை பத்து திருப்பாடலால் பாடி அவர்களை கட்டளை செய்கின்றுர் திருநாவுக்கரசர். காலனைக் கட்டளை செய்தலால் அவர் காலத்தைப் பாசமிட்டவராகின்றுர். அதனுல் இவருடைய இத்திருப்பாடலிற்கு காலபாசக்குறுந்தொகை என பெரியோர் பெயரிட்டுக் கொண்டனர். அவரது காலபாசக் குறுந்தொகையில் காணப்படும் அவர் கருத்தை இப்பொழுதுவிரிவாக உரை நடையில் முன்னுகத்தருகின்றேம். பின்னுக அவர் பாடல் தரப்படுகின்றது. அப்பாடலின் கருத்து மிகு விரிவுடன் முன்னுகத் தரப்படலால் பின்னுக அவர் பாடல் இயல்பில் உங்கட்கு விளங்கிடும். பாருங்கள் அவர் இயமதூதரை நோக்கிச் சொல்கின்றுர்.

இயம தூதரே கேளுங்கள! கண்டு கொள்ள முடியாதவன் கடவுள் சிவன். அந்த பகவானை நான் கனிவித்துக் கொண்டேன். அவன் அருளால் அவனை உணர்ந்து கொண்டேன். அப்படியாக அவனைக் கனிவித்து அருள் எய்திய வரலாற்றை நீர் கேட்டிராகில் உமக்கு நான் சொல்லும் கட்டளை ஒன்று உண்டு. அது தாம

மபபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலன் நம்மைப்

1ம் பக்கத்தொடர்ச்சி

அல்லும் பகலும் அவனுக்கே ஆட்படுமாறு கையில் கொடு கொட்டி தாளம் இவைகளை பாணிக்கு ஏற்றவாறு முளக்கி தொண்டு பட்டு நிற்பார் துயர் காணு அடியார்கள்- அவர் பக்கராக நீர் எக் காரணம் கொண்டும் போகப்படாது.

நோயுற்று முத்து நடுக்கமெழுந்த காலத்தும் பஞ்சத்தும் பசியிலும் துயரிலும் இதுவன்றி இளமை மிளிரும் பக்குவகாலத்தும் எக்காலமும் அசையாது தங்கள்கைகள் கடுக்கும் படி எம்பிராற்கு கல்லவடம் என்னும் மேளம் முழக்குவார்கள். அவர்கள் அதனை வேதனத்திற்காகச் செய்பவர் அன்று. பின்னர் பொருள் இருந்தாலும் இல்லாதிருந்தாலும் எம் அப்பனுக்கு கைகடுக்க கல்லவடப் பறை இடுகின்ற அத்தகையவர் நிலையினை உணர்ந்து அவர்களுக்கு தாமாக மனமுவந்து பொருள் கொண்டு சென்று இதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அன்புடன் அவர் முன் இனிமையுற மொழிவார்களை நீங்கள் துயரப்படுத்தல் கூடாது.

கருமேகம் படியும் பெரும் கொன்றை மரப்பூவின் வாசமுடைய கண்ணி சூடிய கடவுள் சிவனது சீர் கொண்ட நாமம் சிவன் என ஓதி புலம்பும் அடியார்கள் அவர்கள் ஆர்களாகினும் ஆக இருக்கட்டும் நீங்கள் அத்தகைய அடியார்களை சேரக்கூடாது. அவரைக் கண்டால் அவர்களது இடம் விட்டு நீங்கள் உடன் நீங்கிச் செல்லவேண்டும்.

நான் சொல்லியுள்ளேன் உங்கட்கு இதனை. நன்ருகத் தெளிந்து கொள்ளுங்கள் இயம தூதுவரே! சடை முடி நீண்டுள்ள சங்கரன் சிவன் அவன் தன் கோபத்தை மன்மதனிடமாக வைத்து எரித்தவன். அவனது திருவடி முற்றிலும் சிந்தித்து அழுதுறிகளிப்புக் கொண்ட மனத்தராய் சிவ சிவா போற்றி என்று மொழிவார் பக்கராக நீங்கள் போகப்படாது. வேறு எந் நிலையில் நின்ருரிடமும் செல்லுங்கள் சிவா சிவா என்று சொல்லி எல்லாம் அகன்ற ஆனந்தத்துள் மலர்வாரிடமும் நீர் போகக் கூடாது.

இயமனின் தூதுவரே ஓர் இறையளவும என் சொல் மறவாதீர். இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! எதுவாகில் என்ருல் பிறையும் பாம்பும் சடை மீது உடைய பெருமானது உறவினராக போகம் யாவும் அகன்ற அடியார்கள்; அவர்கள் வாசம் கமழும் நல்ல இனிய சந்தனத்திலும் மேனிமுழுவதும் நிறைய திரு நீறு அணியும் அடியார்கள்; அவர் எதிராக நீர் செல்லக் கூடாதுஎன்று இதனையே பலமுறை திரும்பவும் சொல்வேன்! இதை மறந்து போகாதீர்.

அடுத்து வாமதேவன் அமரும் வளமுடைய தலத்திற்கு வேறு ஏதும் ஆசைப்பாடு ஒன்றுமிலாகி கையில் விளக்கும் கொண்டு பூமாலையும் தூபமும் குளிருடைய நல்ல சந்தனமும் இன்பமாய பல பொருளும் அணிந்து போற்றுவார் முன்பு நீர் ஒரு காலமும் எதிர் போகாதீர்.

படையும் பாசமும் பற்றிக் கொண்ட கையுடைய இயம தூதுவரே! நீங்கள் என்ருகிலும் நமது ஈசன் அடியாரை அடையக் கூடாது. பதிலாக இடபமே தனது வாகனமாகவுடைய பெருமானின் அடியார் கூட்டத்தை கண்டால் அவர் பக்கலில் போகாது அவரோடு தீங்கு நினையாது அவரை தூரத்தேதொழுது வணங்கி அப்பால் செல்லுங்கள்.

இயமதூதுவரே நீங்கள் விருப்பமாககற்றுக் கொள்வதொருவித்தையுண்டு. ஆசைப் படக்கூடிய பொருளுண்டு. அப்படியாக உமது வித்தையும் ஆசையுமான செயல் யாவதாக அமைய வேண்டுமென உங்கட்குத் திடம்படச் சொல்வேன். அது தான் நித்தலும் நீறணின்ற சிவனடியாரை நினைப்பதுவே உம் வித்தையாகட்டும். சிவனடியார்களைக் கண்டால் நீங்கள் பயம் கொள்ளுங்கள். அவரருகே போகாதீர். அதுவே உமது விருப்புடன் தேடும் பொருளாகட்டும் அந்தப்பிச்சையுகந்தேற்ற பெருமான் அன்பரைமிகவும் தாழ்வுடன் பேணிக்கொள்ளும்.

இன்னமும் நான் சொல்கின்றேன் கேண்மின்கள் இயமதூதுவரே! நான் உங்கட்குத் திறம்பட மொழிவேன் எதுவென்ருல் இளம்பிறை சூடிய எம்அரசன் சிவன் திருப்பாதத்தை மனத்துத் தியானித்து போற்றுகின்ற பெரியோர் ஓதும் ஐந்தெழுத்தாகிய மந்திரத்தில் ஏதொரு மந்திரத்தையாதல் தெளிந்து கொண்ட அடியார் பக்கமாக நீரொருபோதும் போகக்கூடாது. அப்படிப் போவீராஞல் உங்கட்குத் துன்பமே சூழும் என்பதை நான் இங்கு எடுத்து மொழிவேன்.

நான் முன் சொல்லிய இவற்றுடன் மற்றும் இதையும் நான் சொல்ல இயமதூதரே கேட்டுக் கொள்ளுங்கள். அது தான் என்னவென்ருல் மனதிலேதுமொரு அரியண்டமின்றித் தம் மேனி முழுவதும் திருநீற்றினை நிறையப் பூசி முழந்தாள் மேல் உடுக்கின்ற கோவணமாம் ஆடை கட்டி இவ்வுலகில் சிந்திப்பது ஒன்ருகில் இருந்தால் அல்லது எண்ணுவது ஒன்ருகி இருந்தால் அவை தான் ஒற்றை இடபத்தின் மேல் எழுந்தருளி வரும் பரமன் திருவடியே அல்லாமல் வேறு எப்பற்று ஒன்றும் மில்லாத வஞ்சகமற்ற அடியாரிடத்து நீங்கள் படையெடுத்துப் போகக்கூடாது.

இராவணனுடைய பத்துத் தலையையும் தமது திருப் பாதத்திஞல் நெருக்கி ஊன்றிபிட்ட சிவனது உறவினரெனும் அடியார்கள் நின்ருல் அவரைக் கண்டு நீர் கோபம் கொள்ளாது அந்தப் பெரியோர்களுடைய இடத்தை விடுத்த போய் விடவேண்டும் அப்படி யல்லாமல் நீங்கள் உமது வழக்கமான விரைவின் செயலைச் செய்ய வேண்டுமென அங்கு நினைந்தால் நீங்கள் அதிவிரைவாக அடியாரைக் கண்டால் சிவபெருமான் திருவடிகளை உம் தலை மீது சூடிக்கொள்ள நினைந்து கைகூப்பித்தொழுது கொள்ளும.

உயிர்பிடிப்பதில் விரைவு கொள்வது உமது இயல்பு. அதை நாம் மாற்றமுடியாது. அடியாரைக் கண்டால் எங்கள் வழக்கமான விரைவு அவதிக்கு என்ன செய்வது என்று என்னைக் கேட்டால் நான் சொல்வது. அடியார் அவரைக் கண்டால் உமது செயலாக சிவன் திருவடியை உச்சி மீது சூடிக் கொள்ளும்: அதனையே உம் விரைவாகச் செய்யும் என்பதாகவே சொல்கின்ருர்.

**இப்படி எல்லாம் இயமதூதரை நோக்கி யார். சொல்லமுடியும் அப்படி இயமதூதரைக் கட்டளை பண்ணும் அவர் பாடல் இதோ கீழே தரப்படுவது. நீங்கள் அவைகண்டு ஓதி இன்புற்று மலருங்கள். தீங்கினை நீங்குங்கள்.**

கண்டு கொள்ளரி யானைக் கனிவித்துப்
பண்டு நான்செய்த பாழிமை கேட்டிரேல்
கொண்ட பாணி கொடுகொட்டி தாளங்கை
கொண்ட தொண்டரைத் துன்னிலுஞ் சூழலே.

நடுக்கத் துள்ளும் நகையுளும் நம்பர்க்கு
கடுக்கக் கல்ல வடமிடு வார்கட்கு
கொடுக்கக் கொள்க எனவுரைப் பார்களை
இடுக்கண் செய்யப் பெறீரிங்கு நீங்குமே.

கார்கொள் கொன்றைக் கடிமலர்க் கண்ணியான்
சீர்கொள் நாமஞ் சிவனென் றரற்றுவார்
ஆர்க ளாகிலு மாக அவர்களை
நீர்கள் சாரப் பெறீர்இங்கு நீங்குமே.

சாற்றி னேன்சடை நீண்முடிச் சங்கரன்
சீற்றங் காமன்கண் வைத்தவன் சேவடி
ஆற்ற வுங்களிப் பட்ட மனத்தராய்ப்
போற்றி யென்றுரைப் பார்புடை போகலே.

இறைஎன் சொல்மற வேல்நமன் தூதுவீர்
பிறையும் பாம்பும் முடைப்பெரு மான்தமர்
நறவம் நாறிய நல்நறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வார்எதிர் செல்லலே.

வாம தேவன் வளநகர் வைகலும்
காம மொன்றில ராய்க்கை விளக்கொடு
தாமம் தூபமும் தண்நறுஞ் சாந்தமும்
ஏம மும்புனை வாரெதிர் செல்லலே.

படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்நமது ஈசன் அடியரை
விடைகொ ளூர்தியி னன்அடி யார்குழாம்
புடைபு காதுநீர் போற்றியே போமினே.

விச்சை யாவதும் வேட்கைமை யாவதும்
நிச்சல் நீறணி வாரை நினைப்பதே
அச்ச மெய்தி அருகணை யாதுநீர்
பிச்சை புக்கவன் அன்பரைப் பேணுமே.

இன்னங் கேண்மின் இளம்பிறை சூடிய
மன்னன் பாதம் மனத்துட னேத்துவார்
மன்னும் அஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னி லொன்றுவல் லாரையுஞ் சாரலே.

மற்றுங் கேண்மின் மனப்பரிப் பொன்றின்றி
சுற்றும் பூசிய நீற்றொடு கோவணம்
ஒற்றை யேறுடை யானடி யேஅலால்
பற்றொன் றில்லிகள் மேற்படை போகலே.

அரக்கன் ஈரைந் தலையுமோர் தாளினல்
நெருக்கி யூன்றியிட் டான்தமர் நிற்கிலும்
சுருக்கெ னுதங்குப் பேர்மின்கள் மற்றுநீர்
சுருக்கெ னிற்சுட ரான்கழல் சூடுமே.

## தீபத்தில் திருமந்திரம்.

தீபத்தில் தொடர்பாக வந்து கொண்டிருந்த திருமந்திரத்தை புத்தகரூபமாக அச்சிட்டுத் தருமாறு சில அன்பர்கள் கேட்டுக் கொண்டதற் கிணங்க திருமந்திரம் வெகு விரைவில் புத்தகரூபத்தில் வெளிவர உள்ளது. ஆதலால் தொடர்ந்தும் திருமந்திரம் இப்பத்திரிகையில் வெளியிட முடியாததையிட்டு அன்பர்களை மன்னிக்கும் படி வேண்டுகின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் எனும் குன்றுக் குழந்தையின் பரிதாபநிலை

**நாம் அடியவர் என்கின்றுர் ஞானசம்பந்தர் நாவுக்கரசர்!. அடியார்க்கும் அடியேன் என்கின்றுர் நம்பியாரூரர். இவர் பெயரால் மடம் கட்டிய மடாதிபதிகள் தாமும் அடியவர் என்பாரா? குருக்கள் மாரும் தாமும் அடியவர் எனநினைப்பாரா? பட்டம் பெற்ருேர் நிலையாது? குளாங்கள் நிலை யாது?· தீபத்தின் பணி பற்றிய கருத்துரைகள் இதோ சில!**

ஐயா

தங்களால் பிரசுரிக்கப்படும் மதிப்புக்குரியதும், சிவஞானமே அதன் கருவூலமாகக் கொண்டு மிளிர்வதுமாகிய சந்திர தீபம் திருஞானசம்பந்தப் பெருந்தகையின் குருபூசைத்தினத்தன்று கிடைக்கப் பெற்றதையிட்டு உளம் மகிழ்கின்றேன்.

எவ்வாறு சந்திரன் பூரண சரணடைந்து சிவன் சடாமுடியில் என்றும் மிளிர்கின்ருனே அவ்வாறு ஆருயிர்கள் அனைத்தும் அந்த ஒப்பற்ற மெய்ச்சுடராகிய சங்கரனைச் சரணடைந்து மிளிர வேண்டுமென்பது தங்கள் பத்திரிகையின் தலையங்கக் கருத்தோ என வியக்கின்றேன், வாழ்க சந்திர தீபம், வளர்க மெய்ச்சிவத் தொண்டு.

சிவத்தொண்டு சிவப்பணி என்ற பெயரால் செய்யப்படும் அநாகரிகச் செயல்களைக் கண்டிக்கும் தங்கள் உளத்திறன் போற்றுதற்குரியது. உதாரணமாக அஞ்சிப்போய் கலி ---- என்ற கட்டுரையில் காணச் சகிக்காத கலியின் (ஆசையின்) காட்சி, முற்றிலும் முழுவதும் அதுவே ஆட்சி, கொலையும புலையும கொடுமையும் நீட்சி, கோடிக்கணக்கான மக்களின் வீழ்ச்சி என்ற முறையில் கூறப்பட்டிருப்பவை சைவ நன்மக்கள் உள்ளத்தில் ஊன்றிப் பதியவேண்டியவை.

சிவப்பணிஎன்று தற்போது நடைபெறுவன எல்லாம் மக்களை மிலேச்ச நிலைக்கு கொண்டு செல்கின்றன என்ற தங்கள் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியது. உதாரணமாக சுவாமியை எழுந்தருளப்பண்ணி அத்திருவுருவத்திற்கு உக்கிரமுடைய மின் ஒளியைப் பரப்பி வீதிவலம் வரும் முறைபிழையே. வெட்கப்பட வேண்டியதே, குழிக்கப்போய்ச் சேறுபூசுவதற்கு ஒக்கும். நாம் மிளிர, ஒளிவிட இறைவனை வணங்குகின்ருேம். இதற்கு மாருய் இறைவனை மிளிரவைக்கின்ருேம். நாம். இறைவன் செம்பும் பித்தளையும் என்ற எண்ணம் போலும். இந்தநிலை என்றுதான் மாறுமோ? சிவப்பணியில் மாற்றம் நிகழவேண்டிய வேளையில் சந்திர தீபம் மிளிர்கின்ருன். சிவமணம் கமழ பணி சுலபமாகும்.

அரும் பணியில் ஈடுபட்டிருக்கிறீர்கள். என்பதனுல் இதை நன்றிக்கடனுக வரைகின்றேன். ஞானதீபமாய் மிளிரவேண்டுகின்றேன்.

மாவிட்டபுரம் வே. தியாகராசா.

அன்ப!

சந்திர தீபம் (5 5 78) இதழ் இன்று கிடைத்தது. மிகவும் நன்றி.

0'' ஏதோ எல்லாரும் அவன் அடியவரே, இங்கு இரண்டு காலும் இரண்டு கையும் படைத்து (1) யாழ்ப்பாணத்தில் இருக்கும் எல்லாரும் சிவனடியார் அதை மறவாதே. (2) உனது தொண்டை நீ நல்நெறி படி செய். எது சரி எது பிழை என்று நீ நினையாதே. நீ நினைப்பதெல்லாம் எனது எண்ணமாகும். இதை நான் சொல்லாமல உனக்கு சொல்லிவிட்டேன். (3) இனி உன்பாடு ''

பேசற்கரிய பேராளன் மேலே 1ல் சொன்னபடி எல்லாரும் சிவனடியார் - சாமி விஸ்வநாதக் குருக்கள் ஐயா, திருஞானசம்பந்தர் ஆதின மடாதிபதிகள், மெய்கண்ட ஆதின தம்பிரான் சுவாமிகள், கலஷமண ஐயர் சுந்தரேச சர்மா நிந்தியானந்த சர்மா, குக சர்மா சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆத்ம ஜோதி முத்தையா, சைவ நெறிக்காவலர் முருகேசம்பிள்ளை இவர்கள் உட்பட, யாவரும் சிவனடியார் தாம். ஆனுல் சிலமிலார் கையில் சைவம் என்னும் குன்றுக் குழந்தை அகப்பட்டுச் சொல்லொணு துன்புறுத்தப் படுகின்றது, இவ்வுலகத்தை அன்ப!(2)'' நீ நல்நெறிப்படி செய்'' என்றபடி, நடு நிலையில் நின்று, விருப்பு வெறுப்பின்றி, கண்டன, குரோத கொதிப்பு மனப்பான்மை இல்லாமல் நாயன்மார் காட்டிச் சென்ற மார்க்கத்தில் பிழையை எடுத்துக் காட்டி பாதை எது என்பதை உரைத்து நீக்க வேண்டுமென்பது எனது விருப்பம், சைவம் புல்லூறுவிகள் கையிலும், நாவலர் நாவலர் சபையார் கையிலும, யோகசுவாமிகள் சிவதொண்டன் அடியார் குழாம் கையிலும் சிக்குண்டு அவஸ்தைப்படும் பரிதாபகாட்சியை கலியின் பெருக்கென்று கொள்ளாமல் வேறு என்ன என்று கூறமுடியும்? வேத, சாஸ்திர, சைவ தேவார புராண நெறிநின்று, கலியின் அனர்த்தங்களை சுட்டிக்காட்டுவது தான் சற்கருமமாக முடியும். இக் கருமம் தான் அன்ப! உமது சுய தர்மம். இதை சிவதர்ம வள்ளல்கள் விளம்பர விற்பனர்கள் போன்றவர்களின் வாடை வீசாமல் செய்வதே சாலவும் நன்று. இது தான் (3) ''இனி உன்பாடு'' என்பதன் அந்தரங்க கருத்து.

செ. துரைராஜசிங்கம்.

0 இவை சென்ற தீபத்தில் வெளி வந்தவையாகும்.

# தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்உள்ளே

திருவருள் கைகூடினுல் எது எமக்குப் பேறுகும் என்ருல் அது அவ்வப்போது வரும் சிந்தை தயி தெளிவேயாகும். அந்தச் சிந்தைத் தெளிவாலே பெரியோர்கள் நல்லதொரு நிலை பெற்ருர்கள். ஆமை தனக்கு தீங்கு வரக் கண்டபோது தனது தலை கால் எல்லாவற்றையும் அடக்கி ஒன்றுமில்லாதவாறு கிடப்பது. அதற்கு மேல் அது எதுவும் செய்யாது, அதைப் புரட்டினுலும் குத்தினுலும் அப்படியே கிடக்கும். அது அசையாது. காலையோ தலையையோ நீட்டாது. பின்னர் தனக்கு உற்ற ஆபத்து இல்லை என்ற பின்தான் ஓடும் இது ஆமையின் இயல்பு. இந்த ஆமையின் இயல்பை எமது முன்னைப் பெரியோர் கையாண்டனர்! அதாவது உலகில் சங்கடம் வரத்தலைப்படுவது என்று தெரிந்ததும் தம்மை ஒடுக்குவார், தம்முள்ளே தியானம், தம்முள்ளே விழா, தன்னைப்பற்றிய ஆராய்ச்சி. அன்னுர் பசிவந்தபோது ஓர் இடத்து சென்று அம்மா எனக் கைநீட்டி பசிக்கு ஓர் உணவு அவ்வளவு தான். அதற்கு மேல் இல்லை அவ்வாறுன அவர்கள் தான் முன்னர் எமது தமிழ்நாட்டை அருளால் ஆண்டு; அரசனை நீதியுடன் ஆளவைத்து; வஞ்சனை, கொலை களவு முதலியன நாட்டில் பெருகாதவாறு தடுத்து நிறுத்தும் அருள் வலிமை கொண்டு நின்றனர்.

இந்த ஒரு செயல் இலேசான தொன்ருக இருக்கவில்லை. இந்த செயலின் பெருமை பற்றி என்னுல் சிந்தித்துத் தெளிய முடியாது. சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம் சிவபெருமான். திருவடியே சேரப்பெற்ருேம். ஒன்றினுல் குறைவுடையோம் அல்லோம். உறுபிணியார் தன் திறல் அழிந்து ஓடிப்போனுர் என வீரம் முழங்கிய மேலாம் உத்தமருடைய வீரம் என்னுல் விளம்புரதகையதோ[

கலியின் பெருக்கத்தால் இன்றைய உலகில் சில வசதிகள் வந்து வாய்த்தபோது இவையெல்லாம் வெறும் விசர் வேலை என இவைபற்றிச் சிந்திக்கவும வெட்கப் படுகின்ற மக்கள் சமுதாயத்து நான் இதைப்பற்றி எழுதிக் காட்ட இயலாது பத்தி பத்தியாக இப்பத்திரிகையில் நாம எழுதினுலும் நமது மக்கள் இதை உணரப் போவதில்லை.

காய்சல் வாய்க்கு மாங்காய் புளிதான்தோது; ஏனென்ருல் அந்தவாய்க்கு அந்த நேரம் சுவை அது. நயிலக்ஸ்சாறி ஒன்று கூப்பன் கடையில் வந்து இருந்தால் விடியப்பிறம் கடைவாசலிலே போய் கியூவில நிற்பதற்கு காவல் நின்ற உத்தமிகள் உத்தமகள்ர் முன்பாக நான் இதைப் பற்றிச் சொன்னுல் உதை தான் எனக்கு கிடைக்கும்.

அடுத்த வீட்டுக் குமர்ப்பிள்ளை பெல்பொட்டம் [illegible] பாட்டால் அதென்ன அந்தக்''கேர்ல்'' போடுது ஐயோ! என்ரை மகள் போடுறதில்லையோ என்று மகளிடம் நீட்டியிட்டை உறுக்காட்டியமாய்க் கேளடி என்று சொல்லிவிட்டு கந்தோரில் ஐயா சம்பளம் எடுக்கிறநேரம் இஞ்சாருங்கோ அந்தப் பிள்ளை ஆசைப்படுகுது. உளைச்சுக் கண்ட மிச்சமென்ன வானெலி கூட உதைத்தான் நாகரீகம் என்று! ஒரு நாளைக்கு பத்துத்தடவை அட்வட்டிஸ் மென்ற் செய்யுது! நீங்கள் சும்மா எல்லாம் வேண்டாமென்று சொல்லாதையுங்கோ என்று எங்கள் இலங்கை வானெலி நிலையத்தாரின் பெருமதிப்புக்குரிய மண்டன் கந்தையா குளறி கந்தையா கோமாளி கந்தையா தணியாதாகம் ஆன நாடகங்களைத் தினந்தோறும் கேட்டுத் தானும் மகளும் பழகின பாஷையால் ஐயாமாரை வாங்கப் பண்ணின அம்மாமார் முன்பு செல்விகள் முன்பு நான் இதைப் பற்றிச் சொன்னுல் கறிச்சட்டி தான் என் தலை மேல் கவிழும்!

அதை உணர்ந்து கொண்டு இந்தக் காலச் சுவாமிகள் புத்தியாக சினிமாக் கொள்கையில் பாசன் பிடித்துக் கொண்டு நடக்கினம். அவைக்கு எத்தனை கார் எத்தனை சிரிப்பு எத்தனை மாலை தாள் தாள் காசு அது எல்லாத்துடன் புற்அணைப்பு உள்ள எழுச்சிக்கு.

உற்சாகம் தரும் உணவுகள் குடி நீர்ப்பானம் விதமாக வந்து குவிய அதை அவை விட்டுட்டு தூங்கிக் கண்டார் சிவபோகமும தம்முளே என்று சொன்னுல் அது நல்லையா அப்படித் தான் அவர் ஒரு மாதிரி அவற்றை பேச்சைக் கேளாதையுங்கோ என்று இராத்துடன் இரண்டு பாட்டும் பாடி ஒரு தரனன தொந்தனத்தோம் என்று இராகம் இழுத்து தாதெய என்று ஆடினுர். என்று தாளத்தோடு வீணேரோடு மத்தளத்தோடு கடத்தோடு எல்லாம் சகிதம் சொன்னுல் எத்தனை அம்மாக்கள் தங்கச்சியள் தலை ஆடும் சிரிக்கும் சுவைக்கும் ஐயாமார் கேட்பினை ஆகா என்பினை மாலை பொன்னுடை எல்லாம் பறந்து வருமே!

பின்னர் தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம்முள்ளே என்ருல் எங்களுக்கு நித்திரை சரியாய் வருகிறது இல்லை, குளிசை போடுறம் என்று சொல்லி இது என்ன தூங்கிக் காணட்டாம், இதற்கு நான் என்ன செய்வது. நீர் தூங்கிக் கண்டனீரோ? பிறகு ஏன் இந்தக் கதையைச் சொல்லி மனி தரைக்குளப் புருய் என்று கேட்டால் நான் பதிலே சொல்லமுடியாது. அதுசரி.

ஆனுல் இவ்வளவு பட்டம் பதவி காசு எல்லாம் கொடுத்து அவையளைக் கொண்டு வந்து மேடைமேல் இருத்தி பூமாலை போட்டு குருக்கள்மார் களாஞ்சி நீட்டி சேமம் சொல்லி முகமன் சொல்லி சிறப்புறச் செய்யும் உங்களுடைய ஐயாக்கள் அம்மாக்கள் கொண்டல்கள் குளங்கள் கடல்கள் எல்லாம் கண்

தொடர்ச்சி 8ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால் சட்டை போட்டுக் காட்டி கண்ணாடி மாட்டிக் காட்டி காலால் உதைத்ததையோ கனம் பண்ணல

இன்றுமக்களிடத்து பெரிய தொரு தப்பபிப்பிராயம் தாங்கள் கால் சட்டை ஒன்று போட்டு கண்ணாடியும் ஒன்று மாட்டி கரவிலாத மக்களை வெருட்டி தன்கருமம் பார்க்க காலாலே தூக்கி உதைஞ்சு காட்டி கடுமையாகப் பேசி திரை வைத்தால் தான் பெரியவராயினேன் என்பது.

இந்த ஒரு பெரிய அநியாயம் விளைவிக்கும் நாகரீகத்தைத்தான் வெள்ளைக் காறன் எம்மிடத்து விதைத்தவன். வெள்ளைக்காறன் விதைத்த விதை நன்ருக முளைத்தது. வேகமாகப் பரந்தது. குருக்கள் மாரும் அதுக்கே மதிப்பு அவையின்றை கார் ஒன்று தங்கள் படலையில் வந்து விட்டால் போச்சு! அம்மாமார் முதல் ஐயாமாற்றை கண் எல்லாம் அதிலை தான் அம்மா முதல் ஐயாமார் அனைவரது எண்ணமும் எடே இந்தப் பெரிய உத்தியோகத்தர் என்னைத் தேடி வந்தால் எனக்கு இனி நிகரில்லை என்பதாக வந்தது.

உண்மையில் அந்தக்குருக்களோ குருக்கள் அம்மாவோ நினைப்பார்களா இந்தக் காரும் கனவானும் தன்னைக் கீழ் இறக்க வந்தவர் என்று? இல்லவே இல்லை! அது மதிப்பு! இவரால் எனது ஆத்மீக சாந்தி குலையும் என நினைப்பாரா? இல்லவே இல்லை. இன்றைய பண நெருக்கடிக்கு அவர் பணம் உதவுவார். அத்துடன் இன்னுரும் வந்தனர் என்ருல் மதிப்பு! மற்றவரும் இதைப் பார்த்து எங்கடை குருக்களிட்டை எத்தனைபேர் புதுக்காரிலை வந்தவர் என்று இனிக் கொஞ்சம் தன்னைக் கனம் பண்ணுவார் என்பதாகும்.

இதை நான் தவறு என்று சொல்லவரவில்லை. ஆனல் குருக்கள் தான்யார் தனது பிறவியாது தனக்கு ஒரு ஆத்மீக வளர்ச்சியைத் தேடவென்ருல் எப்படி நடக்கவேண்டும். முன்னைப் பெரியோர் எப்படி நடந்தனர். நான் குருக்கள் என்ற என்னை உலகம் மதிக்கச் செய்த சமயத்தின் நிலை என்னுகும் எனது உள்ள நினைப்புகள் எப்படி மாசுபடும் என்ப த சரியாக விளங்கிக் கொண்டால் எனக்கொன்றுமில்லை விளங்காட்டிலும் எனக்கொன்றுமில்லை. இன்றைய உலகில் அருளின் சீலம் குன்றி அன்பின் உயர்வு கெட்டு எங்கும் கரவும் வஞ்சமும் பொய்யும் பிரனியும் புறமும் மலிந்துற்றது. ஆனல் எமது முன்னைப் பெரியோர் இத்தகைய தீங்கு நெறிகளை தாம் புறக்கணித்தது மட்டுமன்றி தீங்கு நெறியாளரை மதித்தோ கனம் பண்ணியோ திரியவில்லை என்பதை பெரியபுராணம் நாயன்மாரது தேவாரம் முதலியவற்ருல் தெளிவுற்றேன். எல்லீரும் அறியுங்கள் குருக்கள்மாரும் இதனைத் தெளியுங்கள். திருநாவுக்கரசர் பெருமான் ஒரு தேவாரத்துச் சொல்கின்ருர் யாதெனில்

சங்கநிதி பதுமநிதி இரண்டும் எனக்குத் தந்து அடுத்து இந்தப் பூமியோடு எனக்கு வானினையும் நான் ஆழும்படி தருவரேனும் அத்தகையவர் மகாதேவனுன சிவனுக்கு ஏகாந்த சித்தமுடையார் அல்லாது இருந்தால் அவர் மங்கும் இயல்புடையவர். நாம் அவர் செல்வத்தை மதிப்போம் அல்லோம் என்கின்ருர். உண்மையாக இன்று அரசியலில் இருந்தோ வியாபார மூலமாகவோ வேறு எந்தவகையாகவோ பொருள் ஈட்டி காரில் உங்கள் முன் வருவார் நோக்கம் விளங்குமோ? உண்மையில் அவர் மகாதேவர்க்கு ஏகாந்த சித்தமுடையவரோ

அடுத்து இயற்பகைநாயஞர் பெருஞ் செல்வந்தர். அவர் தன்னிடத்துள்ள பொருளை எப்படி மதித்திருந்தார் என்பதைப் பெரியபுராணம் சொல்கிறது. இயற்பகையார் யாதும் என்று பக்கல் உண்டாகில் அது எம்பிரான் அடியவர் உடமை ஐயம் இல்லை என்று எண்ணி இருப்பவராம். உங்களிடம் வருபவர் தன் பொருளை அப்படி எண்ணிக் கொண்டோ வருபவர்?

அவர்கள் கனம் பண்ணியது சிவநெறியின் சீலத்தை அதை அன்றி அவர்கள் வேறு எதனையும் கனம் பண்ணவில்லை. இதுவன்றி சிவனடியார் என தெளிவு பெறக் கண்டு கொண்ட பெரியோரையும் அக்காலத்து அந்கணப்பெரியோர் கனம் பண்ணிக் கௌரவித்தனர் இன்று நிலை என்ன? உண்மையான சிவநெறியில் நிற்பாரை என் செய்கின்ருர் என்பது தாங்கள் ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்வார்கள்!

சாம்பலைப் பூசித் தரையில் படுத்து உன்தாள் இணைக்கே ஏம்பலிப்பார்கட்கு இரங்கு கண்டாய் என திருநாவுக் கரசர் பெருமான் ஓரிடத்து அடியார் துறவின் பெருமை பற்றி அற்புதமாகச் சொல்கின்ருர். சாம்பலைப் பூசினர் அடியார் எதற்காக சிவனுக்காக. தரையில் படுத்தார் எதற்காக சிவனுக்காக. ஏம்பலிப்பது என்ருல் இன்னருள் வருமோ வராதோ என்ற மன அங்கலாய்ப்புடன் அதனையே அக்கறை கொள்வது. என்பிள்ளையை இன்னும் காணவில்லை எனத் தாய் ஏம்பலிப்பது இயல்பே அந்த ஏம்பலிப்பு அடியாரிடத்து சிவனைக் கண்டு கொள்ளும் அளவில் உண்டு. இந்த ஏம்பலிப்புடையவர் தான் ஒன்றும் வேறு நினைப்புமின்றி சாம்பலைப் பூசினர். தரையில் படுத்தார்.

ஆனல் இன்று உங்கடை தம்பிரான் சுவாமியள் செல்வர்கள் செல்விகள் என்ன ஏம்பலிப்புடையர் நினைந்நீரோ? ஓரளவிற்கு அவர்களுடைய ஏம்பலிப்பு எது என்று எம்மளோர்க்கு விளங்காதோ? சிவனருளின் ஏம்பலிப்புடன் இருக்கும் அடியாரை மறந்து; அவர்கள் நிலையை மறந்து பேச்சாளராய வீராங்கனைகள் வீர ஐயாக்களை மதித்து வந்த தோஷம் தான் இன்றைய அடி எங்களுக்கு விழுந்தது என்ருல் தவறில்லை. இவ்வளவு உதை விழுந்தது. இவ்வளவு சூடு விழுந்தது. எத்தனை தடவை நடந்தது? ஒருக்காலா இரண்டு தடவையா இல்லை. இன்னும் இது ஓயும் குறி உண்டா. இன்னும் இதுவன்றி அருள் நெறி உடையவரையே கனம் பண்ணிய அந்தணர் பெருமக்களைப் பற்றி பெரிய புராணம் கூறுகின்றது. அப்பரைச் சம்பந்தர் பணிகின்ருர். சோமாசிமாறர் அருள்வழி நின்ற அடியார் எவரையும் பணிபவர். அடுத்து அப்பூதி அடிகள். இப்படி எத்தனையோ அந்தணப் பெரியோர் அடியாரை மட்டுமே பணிபவராக அவரை மதிப்பவராக இருந்திருக்கின்ருர் புறத்திருத்தொண்டர் எனப்படும் நந்தனர் முதலியோரை தில்லைவாழ் அந்தணர் முதல் அனைவரும் போற்றும் பண்பு காணப்படுகின்றது.

இன்றைய இந்த மிலேச்ச நாட்டு நாகரீகம் தலைப்பட்ட பின்பு எமது அந்தணர்கள் என் செய்கின்ருர் என்பதை நான் இங்கு சொல்லிக்காட்ட வேண்டிய தில்லை.

நல்லூர் வாசலில் வைத்து ஆருக்கு காளாஞ்சி? மாவிட்ட புரத்தில் யாழ்ப்பாணம் சிவன் கோவிலில் நயினதீவில் யார் யாருக்கு காளாஞ்சி குருக்கள் மார் கொடுத்தனர் கொடுப்பிக்கப்பட்டனர். காளாஞ்சி வேண்டிக் கொண்டு; கொடுத்தவர்க்கும் சரி கொடுப்பித்தவர்க்கும் சரி நீயாடா என்று உதை விழவில்லையா? இவர் எனக்கு கோவில் வாசலில் காளாஞ்சி தந்தவர் என்று நினைத்து விடுபட்டதா; வரவேற்கமுன்னின்று சிரிச்சுக் காட்டி தலை சரிச்சுக் காட்டி உரை சிவத்தமிழால் நிகழ்த்திக் காட்டிய தங்கச்சி தம்பியள் சுவாமியள் பாடு எப்படி இருந்தது? சுகமாக விடுபட்டிருப்பாரா?

விழா ஒன்றில் அடி விழ சிர் குலைஞ்ச படி ஓடியது ஞாபகமிருக்குமா? இதேன் வந்தது என்று ஒரு சிறுகணம் சிந்தி பீரா; மேடையில் ஏறி நின்று வீரம் முழங்கினியள். இங்குள்ள நல்லவரையும் பெரியவர் சிறியவர் என்ற பேதமை இல்லாது எல்லாரையும் கூக்காட்டி கைதட்டி எளனம் செய்தீர் ஆர்ப்பாட்டம் செய்தீர் எங்கே உமது குறிக்கோள் கைகூடியதா? ஏன் கூடவில்லை? என்ன பழி எங்கள் குறிக்கோளை அடையமுடியாத படி தடுத்தது என சற்றேனும் நினைந்து இனியாலும் உங்கள் போக்கை மாற்றுவீரா! உங்களால் அது எப்படி முடியும் அருளின் உயர்வுடையாரையும் உங்கள் வசை மாரி பொழியும் மொழியால் வாழத் தலைப்பட்டால் நன்மையும் வரும் என்பது இருப ாம் நூற்ருண்டின் தருமமா? அருளாளரையும் நோகப் பணல் அது சிவத்தமிழ் என பட்டம் சூட்டப்பெறுவதா?

சில நாட்கள் முன்பு நான் சுண்ணுகம் வழியாகச் சென்ற போது ஒரு அந்தணர் என்னிடம் தான் அவ்விடத்து ஓர் இலட்சார்ச்சனைக்கு போவதாகச் சொல்லி என்னை முந்திக் கொண்டு போனவர். நானும் பின்னல் போகும் போது ஒலி பெருக்கி அக்கோவிலில் தொடங்கு இலட்சார்ச்சனையை அறிமுகப்படுத்தியது. நான் சென்று பல மணிநேரம் கழித்து திரும்பி வந்த நேரம் அந்தக் கோவில் குருக்கள் சந்தைக்கு வாழைப்பழம் வாங்க விசாரித்து நிற்பதைக் கண்டேன். அவரைக் கண்டு அவரை நான் ஓர் பெரியவர் இவர் என மதித்திருந்தபடியால் அவரிடம் எனது சந்திர தீபப் பத்திரிகையை நீட்டி இதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றேன். அவர் உடன் சுறுக்கென்று எனக்கு வேண்டாம். நான் எங்கோ போறன் என்ருர் எனக்கு இதென்னடா வர் இப்படிச் சொல்வதற்கு காரணம் இவரும் நான் ஏதோ தங்கள் குலத்தை அவமானப் படுத்த எண்ணிப் பத்திரிகை நடத்துறன் ஆதலால் தான் என்னட்டை இதை வாங்கக் கூடாது என நினைந்திருக்கலாம்,

அவர் எப்படியும் நினையலாம் எனக் கொன்றுமில்லை. ஆனல் எமது பத்திரிகைப் பணி சிவனருளின் சீலத்தையும் அடியார் பெருமையையும் எடுத்துக் காட்டுவதே ஒழிய நான் எவரையும் துன்புறுத்த விரும்பவில்லை; அது எக்காலமும் என்னில் வராது. நான் பெரிய சீலமுடைய அந்தணர்களுடன் சிறுவயசில் இருந்து சைவசீலம் விளங்கிக் கொண்டவன். ஆதலால் எனது ஆசை அத்தகைய அந்தணப் பெரியோர் சீலம் மிகுந்தவர் நம் நாட்டில் பெருக வேண்டு மென்பதே ஆர் கோவித்தாலும் எனக்கு அக்கறையில்லை. புழுதி துடைத்துத் தான் தாய் முலை கொடுப்பவள்.

புழுதி துடைத்து முலை கொடுப்பதன்றி புழுதியைத் துடையாமல் முலை கொடுக்கக் கூடாது. புழுதி துடைக்கப் போனல் பிள்ளைக்கு வேதனை. ஆகையால் மிலேச்ச நாட்டு நாகரீகம் முற்றிலும் எமது சிவநெறியை மூடிக கொள்ள அதனல் மருமகனு மகளும் நல்லதொரு கால்சட்டை கூலிங் கிளாஸ் மாட்டுத் தோல் சப்பாத்தும் அல்லது செருப்புடன் வீட்டுக்குள் நுழைய அதேவீட்டில் நின்று சுவாமிக்கு நைவேத்தியமும் சமைத்து எடுத்துக் கொண்டு கோயிலுக்கு செல்லும் நிலையை உண்மையில் என்னல் காண முடிவதில்லை.

**ஆவதும் அழிவதும் எல்லாம் அவர் செயல்!**
**பாவச்செயல் புரிவாரை தவறு என்று**
**சொல்வதும் புண்ணியம் புரிவாரைப்**
**போற்றுவதும் என்பணி**

---

## தீபத்திற்த ஓர் அன்பரின் கருத்து

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்,

திருவாசகமடம்
திருக்கேதீஸ்வரம்.
மன்னர்

பெருமதிப்புக்குரிய ஐயா. வணக்கம் பல.
தாங்கள் அனுப்பிய சந்திரதீபம். 24.3.78. 14.3.78 5.5.8. ஆக மூன்று பிரதிகளும் கிடைத்தது. மட்டற்ற மகிழ்ச்சி.

அடியேனையும் பொருட்படுத்தி சந்திரதீபத்தை அனுப்பி வைத்தமைக்கு பெருநன்றியுடையேன்'

சந்திரதீபத்தின் அறிவுரை கேட்டு இன்றைய சமுதாயம் திருந்தாவிடினும் இனிவரும் சமுதாயத்துக்காவது இது ஓர் அடிக் கல்லாக அமையுமென நம்புகின்றேன். தங்கள் தொண்டு சிறக்க இறைவன் திருவருளை வேண்டுகின்றேன்.

ஒரு நாவலரால் தான் சைவம் வளர்ந்தது.
அதில் ஏற்பட்ட ஊழல்களைக் களைய ஒரு நல்லையாவை இறைவன் தந்திருக்கிருர் என மிகவும் சந்தோஷப்படுகின்றேன்.

வணக்கம்.
தாழ்மையுள்ள
சி.சரவணமுத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலியில் வந்தால் மாண்புடைய தெனவோ நினைந்தீர்.

## இன்று எமது சைவநெறியில் பிடித்ததொரு பெரும் பீடையாவது விலாசம். அடுத்து அதனிலும் பெரிய பிணி பட்டம்.

உண்மையாக இந்த இரண்டு பிணியும் எமது உத்தம நெறியாம் சிவநெறியில் புகுந்து மனிதகுலத்தையே அது மிகவும் கீழ் நிலையில் கொண்டு வந்துள்ளது. இதையாவரும் உணரவேண்டும். இன்று பட்டம் பெறும் நிலையையும் பட்டம் கொடுப்பாரையும் பார்த்தால் எனிமேல் கடவுள் என்றும் நீதி என்றும் மேன்மைகொள்சைவ நீதி என்றும் சொல்ல இடமில்லாத வகை பட்டங்கள் மலிந்துள்ளன. பதக்கங்கள் பெருகி உள்ளன.

தன்னைக் காண அன்பர்வந்தால் வாசலில் காவல் காரனைக்கொண்டு நிற்பாட்டுவித்து அவனைஎங்கே ஐயா என்றுகேட்டாலும்சொல்வியாமல்காவல் இருக்கப்பண்ணி கடைசியாக அதுகள் மனம் வெறுத்து திரும்பிப்போகப் பண்ணிய சவுர்க்கார முதலாளிமார் சைவத்திற்கு பதக்கம் கொடுக்கிறார். இது இன்றைய நிலை, அடுத்து சைவத்தின் சீலம் எது என்று விளங்காதவரே. தன்னைச் சுவாமி என்று போட்ட பூநூலையும் அறுத்தெறிந்து போட்டு அவர் பட்டம் கொடுக்குகிறார். அவருக்கு காசு கொடுத்த இரும்பு பொன் வெள்ளி சர்வத்து சாரக்கடை உப்பு புளி பருப்பு ஊறுகாய் முதல் அனைத்து கறுப்பு சிவப்பு பொருள் கடை முதலாளிமார் சைவத்தின் பெருமதிப்பிற்குரிய பட்டங்களைப் பெற்று மிளிர்கின்றனர். இன்றைக்கு பல பேற்றை கார் வசதியாகவர அதில் ஏறி உல்லாசமாக ஓடித்திருந்து கொஞ்சம் இலக்கணம படித்த மணிகட்டிய பண்டிதர் தாமும் சைவசீலம் விளங்கினர் போல மணிமொழி உபதேசம்! இது எல்லாம் சரி! ஒரு பிழையும் இல்லை, ஆகையால் முன்னைக்காலத்து நாயன்மார் நல்வார்த்தை வேண்டியதில்லை. அவர்களில் இவர் அனைவரும் மிஞ்சியே விட்டனர்.

எங்கள் வீட்டில் ஆண் நாயை அது என்னைக் கண்டு ஊழை இட்டால் அதற்கு சிவக்கவிமணி என்றும் பெட்டை நாய்க்கு செந்தமிழ் செல்வி என்றும் அதற்குமேல் அதற்கு செஞ்சொல் கொண்டல் என்றும் பேசமல் ஊளையிட்டதற்காக சிந்தாந்தசாகரம் பெரும சித்திரம் சிறுச்சித்திரம் என்றும் அதிலும் சிவமிருந்த படியால் அதன் குரைப்பை சிவத்தமிழாகவும் கொண்டு சிவத்தமிழ் செல்விஎன்றும்; அடுத்து எமது பதிப்பகத்து முன்பாக மத்தியானவேளை எமது நாயும் பிற நாயும் எமது அச்சுக்கூடவாசலில் படுத்திருந்தும் பிறநாய் எமது நாய்க்கு பயந்து தூரத்து படுந்திருந்தும் அச்சுக்கூடத்து பிள்ளைகள் சாப்பிடும் பொழுது அந்தச்சாப்பாட்டின் மிச்சத்திற்காக காத்திருந்தவேளை நான் எங்கோபோய் வந்தனன்; எனது நாயையும் பிற நாய்களையும் கண்டு ஓகோ! இவையளும் எமது சிவநெறி பரப்பும் அச்சுக்கூடத்தை காவல் புரிந்த படியால் அவையளுக்கு சிவநெறிக்காவலர் என்றும்; அடுத்து எனது பூனை எனது அச்சுக்கூடத்து என்புத்தகங்களை அரிக்க அறுக்கவந்த எலிகளை விட்டுப்பிடித்து கலைத்து புத்தகங்களைப்பழுதாக்காது இருந்தபடியால் அதுக்கு சிவநெறிப்புரவலர் என்றும்பட்டம் சூட்டி பதக்கம் கொடுத்தும் அவை படுத்திருந்த கோடியை தபோவனம் ஞானமடம் என்றெல்லாம் சொல்லி எங்கள் வீட்டில் சிறுபிள்ளைகள் கட்டிய கோவில் முன்னால் வைத்து அதற்கு பாராட்டு விழா கியூவரிசையில் பூமாலை இதெல்லாம் செய்யலாம். ஒருவரும் அதைத்தடை செய்யமுடியாது. ஆளும் கட்சியோ எதிர்க்கும் கட்சியோ இது பிழை என்று சட்டம் கொண்டுவரவில்லை. அப்ப நான் செய்யலாம், நான் செய்யலம் ஆனல் நாய் என்ன செய்யும்? அதுசீ எனக்கு உது வேண்டாம் எண்டு பூமாலையை பதக்கத்தையும் கண்டு ஓடுமோ அது தெரியாது. நான் அதற்கு விழா எடுக்கையிக்கை உஞ்சு உஞ்சு இஞ்சைவா இஞ்சைவா ஜிம்மி காட்டர் இஞ்சைவா நில் என்று கத்திக் கூப்பிட்டால் அது நிற்குமோ? தெரியாது. சிலவேளை பூமாலையாலே பிடிச்சுக்கட்டிப் போடுவினம் என்று பயந்து ஓடிவிட்டதாக்கும்.

இப்படியாக எனது நாய் வேண்டாமென்பதை தம்பிரான் சுவாமிகள் அள்ளிக் கொடுக்க தம்பிமாரும் தங்கச்சியளும் காரில் உல்லாசமாகப் போய் வேண்டுகின்றார். ஐயோ என்றை நாய் ஏன் நான் பூமாலை கொண்டும்போட பதக்கம் கொண்டோடவாலைக்கிளப்பிக்கொண்டு ஓடுதே என்ற கவலை எனக்கு. பூனையும் அப்படிச் செய்ய ஆகக் கூடக்கவலை பெருகிச்சுது.

இப்படிக் கவலைப்பட்ட எனக்கு ஒரு நாள் ஒரு அன்பர் ஒரு கதை சொன்ன ஞாபகம் வந்தது அதையும் உங்களிடம சொல்கின்றேன். அறவாழி அந்தணன் போன்ற ஓர் பெரியவரிடம் என் நண்பர் தரிசனைக்காகச் சென்றிருந்தாராம். அப்போது அப்பெரியவரிடம் யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற சில பாய்மார் குடும்பமாக சுவாமிக்கு தங்களால் மிகத்திறம் படச்செய்யக்கூடிய தூய இனிய பலகாரவகையும் பழமும் கொண்டு வந்து வைத்து திருமுன்பு வணங்கினராம். அவருடன் சுவாமி கதைத்து விட்டு அவரை அனுப்பிவிட்டு அங்கு நின்றாரை நோக்கி ஒரு மண்வெட்டி கொண்டுவா என்றாராம். கொண்டுவந்ததும் அதிலை ஒரு கிடங்கு வெட்டு என்றாராம் கிடங்கு வெட்ட இந்த இவ்வளவு இனிப்புப் பண்டத்தையும் தூக்கிக் கொண்டு போய் கிடங்குக்குள்ளை கொட்டி வடிவாய் மூடு என கட்டளையிட்டாராம். பக்கத்தில் இருந்த என் நண்பர் அவர் ஒரு வைத்தியத்துறை பெரியவர் அதைக்கண்டு சகிக்காமல் சுவாமியை நோக்கி சுவாமி நீங்களும் எடுக்காமல் பிறர்க்கும் கொடுக்காமல் போனாலும்; இதை நாய்க்காதல் போடலாமே; என்றாராம். அப்போது வந்தபதில் ''ஐயோ நாய் என்ன பாவம் செய்தது இதைத்தின்ன! குருசாமி உனக்குத்தெரியுமோ இதை அவை சமைக்கயிக்கை எத்தினை நேத்திக்கடனை சமைத்திருப்பார்'' என்று அந்தக்கதை என்மனதில் வந்தவுடன் ஐயோ ஓடுறநாயை நான் கலைத்துப் பிடித்து சாபபாட்டுக்கே அந்தரப்படுவதை என்றை பூமாலைப் பழியை அழுகல் பட்டப் பழியை தட்டார ஐயாமார் அரைவாசி உரைஞ்சிப் போட்டு செய்துதந்த பதக்கப்பழியை அதன்மீது சூட்டக்கூடாது என நினைந்தேன். நீங்களும் என்ன நினைப்பீர், நாய்க்கும் பூனைக்கும் பூமாலை போட்டு அந்தப் பாவங்களை இன்னும் பழி சேரப்பண்ணலாமோ?

இந்தப்பட்டமும் விலாசமும் என்செய்தது என்று மனதில் ஆராயப்புகுந்தால் அது அருவருக்கத்தக்க உள்ள விளைவுகளை உண்டாக்கி அதாவது அன்பின் உத்தம விளைவுகள் முற்றாக மாசுபடுத்திவிட்டது. இதை அறவோர் எனப்படும் அந்தணர் தாமும் உணர்கின்றாரில்லை. பெரும்பாலும் தமது விலாசத்தை பட்டத்தை மதிக்கின்றாரே ஒழிய எந்த ஒரு அந்தணரும் தமது அறத்தின் சீலத்தை மதிக்கவே இல்லை. இதனாலே அவர்களுடைய கிரியைகளின் செயல் முற்றிலும் மாசுபடும் நிலமையாகின்றது.

முன்னைப் பெரியோர் அப்படி நடந்து கொள்ளவில்லை. அவர்கள் தமது அறத்தை நன்கு உணர்ந்து அதன் சீலம் வழுவாதே செய்து வந்தனர். இடையில் வந்தது ஐயாமிலேச்சநாகரிகம். பிறகு பேசத்தேள் வெயில்லை. உண்மையாக இலங்கை நகரில் பெரும்பாலும் எங்குள்ள அந்தணர்களுடைய நிலையிலும் இந்த விலாசம் பெரும் சங்கடத்தை வருவிக்கின்றது. அடுத்து எத்தனை பட்டம் ஒருவருக்கு! இன்றெல்லாம் தனது கோத்திரம் எப்படி தான் யார் என்று அறியாத அந்தணர்கள் பெரும் பாலும் சாஸ்திரிகளாக மிளிர்கின்றனர்! ஐயோ அது தவறு என்று நான் சொல்லவில்லை. ஏத்தனைபேரும் சாத்திரிகளாகட்டும் எத்தனை பேர் பூஷணங்கள் ஆகட்டும் எனக்கு உண்மையில் அதில் ஏதும் சங்கடமில்லை. ஒரு வேதனையும் எனக்கு இல்லை. ஒருவரதுபட்டம் 7முழ அளவிற்கு நீண்டிருந்தாலும் எனக்கு ஒன்றுமே இல்லை. இரண்டு காலும் இரண்டுகையும் படைத்தவர் யாரும் சிவனடியார் எமது முன்னைப் பெரியோர் அதை நன்கு உணர்ந்து செயல் பட்டனர் அடியேனும் அவர்பாதம் என்தலை வைத்து உணர்கின்றேன், அவர் வழிச்சார நிற்கின்றேன்.

ஆனல் அந்தணர் என்போர் தாம் அறவோர் என்பதை தாம் விளங்கிக் கொள்கின்றாரில்லை என்பது தான் எனது கவலை. அவர்களுடைய அருளினல் இவ்வுலகம் நன்மையடைவது என்று நீதியுடைய எல்லாவேத ஆகம நெறிபோற்றும் நூல்கள் அறிதிபிட்டு மொழிந்தன. அப்படியிருப்ப முற்றிலும் அருள்வழியை நாட வேண்டியவர் அருளை விடுத்து இருளைப்பெருக்கிடும் பட்டத்தையும் விலாசத்தையுமே மதித்து நின்று அதற்காக கலியின் வலியிலே சிக்குண்டு அதனின்றும் விடுபடமுடியாதிருப்பது உண்மையில் காணச்சகிக்க முடிவதில்லை.

தனது ஒரு நிகழ்ச்சி வானொலியில் அஞ்சல் செய்யப்படுவது என்ற போது அதனை மிக்கதொரு பெருமை என்று எண்ணுதை ஒரு அந்தணர் இங்குயாருமே இருப்பதுண்டா? வானொலி கலியின் பெருக்கே என்பதை என்று ஒரு அந்தணர் உணர்கின்றாரோ அன்று தான் அவர் தனது அறத்திற்குரிய அந்தணர். அவர் தான் அருளை விளங்கிய அந்தணர்.

உண்மையில் ''இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல'' என திருமுருகாற்றுப்படையில் நக்கிரர் பெருமான் மொழிகின்றார் இந்த இருபிறப்பாளர் என்பதன் கருத்தை உண்மையாக இன்றைய அந்தணர்குலம் விளங்கிக்கொண்டால் எமது சைவநெறியும் அவர்களுமே எவ்வளவு உயர்வாம் நெறியில் நிற்பார்கள்.

இன்றைய மிலேச்ச நாட்டு நாகரீகம் பெருகிய நாளில் பொழுதறிந்து நுவல என்ற பதத்திற்கு பயனை நாம் காணமுடியாது. அது தானே பெருமாள் கோவில் ஒலிபெருக்கி விடிஞ்சதும் சுப்பிரபாதம் போடுது காணுதோ! அது திருமணவீட்டிலும் கேட்குது செத்தவீட்டிலும் கேட்குது. பிறகு என்ன பெருமாள் செத்த வீட்டிலும் நிற்பார் திருமணவீட்டிலும் நிற்பார் போடுறனபலா என்று தானே சொல்லவேண்டும்! பிறகு ஏன் குருக்கள் மார் விடியப்புறம் மத்தியானம் பொழுது பட என்ற நிலையில் ஓதவேண்டும்! அதுகள் நேற்று சங்காபிஷேகத்து அலுப்பு முந்தநாள் திருவிழா அலுப்பு அடுத்து கும்பாபிஷேக அலுப்பு அந்த அலுப்போடை ஐயர் படுத்திருக்க என்னென்று பொழுதறிந்து நுவல்கிறது. ஒலிபெருக்கியும் வானொலியும் காணும் அது பொழுது அறிந்து பேசுது. வானொலி கேல்ஸ் உம் போயிஸ் உம் வடிவாய் பேசினை இந்த வானொலிபோயி சிலே அந்தணப் பிரபுக்களினின் பெருமைக்குரிய திருக்குமாரரும் இருக்கிறார்கள்.

அந்தநாளையில் மனிதன் மோட்டுத்தனமாக விடிய விடிய எழும்பி கத்திவைன். இப்பதேள்வையில்லை. ஒரு சிகரட்டைப் பத்த வைத்துக் கொண்டு வானொலிப்பெட்டிக்கு அருகில் போனால் காணும் என்றது கலியின் ஆட்சி. அதை நான் ஒன்றும் செய்ய முடியாது. கலிக்கு என்மீது சரியான கோபம் வரும். உன்னையார் என்றை ஆட்சியை குறைசொல்லச் சொன்னது? உன்னைப்போல் எத்தனை பேரை நான் பதம்பார்த்த நான் என்று எனக்கு சதித்திட்டம் ஒன்று வகுக்கும். அதற்கு அதனிடம் தாழ்மையாக உன்னை அடியோடு நீக்கிய பெரியபுராணத்தை. கந்தபுராணத்தை அச்சிட்டு வெளியிடும் திருவுடையேன். அடுத்து தேவர்கள் என்னைச் சூழ நின்று காப்பர். சிந்தை என்னுடைய உயிரையும் ஐந்து புலன்களையும் செவ்வையாக நடத்தும். கலியே எவ்விடத்தும் எனக்ர காவலுண்டு, நீ என்னுடன் சதி செய்து என்னை வெல்லமாட்டாய் கற்று ஆங்கு பின் அக்கினிவளர்த்து உன்னை வராமல் அகற்றிகு அந்தணப் பெருமக்கள் திருவடி எனக்குத்தஞ்சம். அவர் புகழ்யாவும் என்னை நீ ஒன்றும் செய்யமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பொன் மணி நூல்தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி

பெரியபுராணத்து சேக்கிழார் பெருமான் நமது நன்நெறிப்படும் ஒவ்வொரு சைவக் கன்னிப் பெண்களாகும் யாவரும் சிந்திக்கக் கூடிய இந்த ஒருவார்த்தையைச் சொல்லி இருக்கிறார். திருமணமாகும் கன்னிப்பெண்கள் தாங்கள் ஒருவர்க்கு நாயகியாகின்றேன் என்றமைக்காக அணியப் பெறுவது தாலி அல்லது மாங்கல்யம் எனப்படுவது. இந்தத்தாலி பொன்னில் செய்து நூலில் கோத்து கழுத்தில் அணியப் பெறுவது. இந்த தாலி அணிந்து கொண்டாள் முற்றிலும் தனது கணவனுக்கு ஆட்பட்டாள் என்பது எமது சைவ தருமம். பட்டதாரிகள் பேராசிரியர்கள் அரசியல் வாதிகள் நீங்கிட மற்று சைவத்தின் சீலம் விளங்கிக் கொண்ட பெரியோர் அனைவரும் இதனை ஏற்பார். ஒருவர்க்கு ஆட்பட்ட பெண் எந்நிலையிலும் வேறொருவர்க்கு பணி புரியும் உரிமை உடையவள் அல்லள் என்பது தொன்று தொட்டு நிலவிய சைவதருமம்.

இந்த ஒரு முற்றிலும் கணவனுக்கே ஆட்படும் அத்தருமக் கொள்கையின் விளக்கத்தால் எம்முன்னைய தாய்மார்கள் தனது கணவன் இறந்தால் தானும் இவ்வுலக வாழ்வை நீத்து கணவனுடன் செல்லத் துணிந்தமையாகும். அப்படிச் செய்தவ தான் திருநாவுக்கரச பெருமானுடைய திருத்தாயார். அதன் சீலம் பற்றி என்னல் எழுதி இங்கு காட்டமுடியாது.

கணவனுடன் செல்ல முடியாதவர்க்கு கைம்மை நோன்பு என சில விதிகள் உண்டு. அதன் படி ஒழுகுதல் நன்று. இதை எல்லாம் விடுத்து ஐயாமாரை வேலைக்கு அனுப்பி அம்மாமார் ஐயாமாற்றை பென்சனில் ஆடாத ஆட்டம் போடாத சட்டை காணுத சீலை காட்சிகளுடன் இருப்பாரைப் பற்றி நான் ஒன்றும் சொல்லமுடியாது. இந்த அம்மாக்கள் செய்யுறது சரி அதிலை ஒரு தவறும் இல்லை என்று வாதிடும் தற்கால விஞ்ஞான போக்குடைய மேதாவிகளின் தலைவர் காந்திச் சாமி ராமா சொல்லையிக்கிள்ளை இராமபாணம் போல குண்டு நெஞ்சில் பாய்ந்தது. அவர் போனார். அவர் உலக மேதாவியாக கொண்டாடப் படுகிறார். ஐயாமாரை வெள்ளன அனுப்பிய அம்மாமாரின் செயல் சரி என்றே சுயநிர்ணய உரிமைத் தலைவர் அவர். அவரைப் போற்றவேணும் ஆனல் எமது திருநாவுக்கரசர் பெருமான் அவர் தாயார் அப்படி தந்தையாரோடு போனமையால் தான் போலும் அவர் திருவருளின் முதன்மை பெற்றுத் திகழ வந்தது என்றும் அவர் குண்டு பட்டு அடிபட்டு நோய் வந்து சாகவில்லை. எல்லோரும் உளம் மலர இன்பமுற இறைவனுடன் பதிகம் பாடிப் பாடிக் கலந்தார் என எனது பேய் மனம்சிலகால் நினைக்கிறது. அதற்கு நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். ஏன் என்றல் நாவுக்கரசருடைய தாயார் அல்லது சகோதரியார் செய்தது அவ்வளவு பெரிது அல்ல. காந்திச் சாமி உயர்ந்தவர் என்று கொண்டாடும் தமிழ் நாட்டை நாம் சிறுமை உடையது என்று சொல்லலாமோ?

அடுத்து இந்தத் திருநாவுக்கரசர் திருத்தாயார் கணவனுடன் போன பின்பு அப்பொழுது மருணீக்கியார் என்னும் நாமமுடன் இருந்த திருநாவுக்கரசருடைய தமக்கை திலகவதியாரும் தனித்துக் கொண்டனர். இது இப்படி இருக்கும் காலத்து திலகவதியாரது தந்தை உயிருடன் இருக்கும் போது அவரைக் கலிப்பகையார் என்னும் அரசசேனதிபதிக்குத் திருமணம் முடித்துக் கொடுக்க நிச்சயம் செய்திருந்தனர். ஆனல் தந்தை போயிட்டார். தாயாரும் போயிட்டார். நிச்சயம் செய்த கணவனைக்கூட கண்ணல் ஒரு நாளும் கண்டிரார் திலகவதி. தந்தை தாயர் நிச்சயித்தது தெரிந்து கொண்டாவே ஒழிய வேறு எதுவும் அவ அறியா.

சரி இப்படித் தாய் தந்தை இறந்திட சுற்றத்தின் தேறுதலில் வாழும் இரு பிள்ளைகட்கு வேறு யாரும் துணை இல்லை. இப்படி இருக்கும போது திலகவதியார்க்கு தனக்கு நிச்சயம் செய்த மணவாளன் கலிப்பகை போரில் நாட்டின் நலனுக்காக உயிர்கொடுத்த பெருவார்த்தை கன்னிப் பெண்ணக இருந்து வாழும் திலகவதியார் கேட்டுக் கொள்கின்றர். உடன் அத்தூய உள்ளத்துக் கவலையும் கண்ணீரும் பெருகுகின்றன. அத்துடன் மேற்கொள்ளும் தீர்மானமும் என் தாயார் என் தந்தையார் உடன் சென்றர். ஆகவே என் தந்தை என்னை அவர்க்கே (கலிப்பகையார்க்கு) உரித்தாகக் கொடுக்க நினைந்தமையால் தான் அவர்க்கே உரித்தானவள் என்ற தூய நினைப்பு வந்து கொண்டது. அத்தூய நினைப்பால் தன் உயிரையும் தன் கணவன் கலிப்பகையாரின் உயிருடன் இணைக்க எத்தனிக்கின்றள். அந்த தூய தெய்வீகம் நிறைந்த உள்ளத்துணிவு தம்பியார் மருணீக்கியார்க்கு வெளிப்படுகின்றது. உடன் தமக்கையார் காலடியில் சென்று வீழ்கின்றர். கதறுகிறர் அக்கா என்னை தனியே விடுத்து எங்களது குடும்பத்தருமவழி நீயும் போக நினைந்தால் உன் முன்னக நான் போவேன். இதோ செய்வேன் என்று கூறிக் காலைக் கட்டிப் பிடித்துக் கதறுகிறர்.

திலகவதி இரங்குகின்றர் தம்பியாரைப் பார்க்கின்றள். அவர் ஒரு மனிதராக இவ்வுலகில் திகழ வேண்டுமென எண்ணிக் கொள்கின்றள். மனிதராக என்றல் அவர் ஒரு அரசராகவோ பெருமதிப்புக்குரிய செல்வந்தராகவோ அல்லது வேறு ஒரு சமயரீதியில் சந்நிதானமாகத் திகழ வேண்டுமென அம்மையின் உள்ளம் நினையவில்லை.

பதில் அவர் நன்குடைய சீலமுடன் வாழ்ந்து திருவருள் கடாட்சத்தைப் பெறுகின்றவராக வரவேண்டும் என்ற விருப்பத்தால் தனது கணவனுடன் செல்ல நினைந்த நினைப்பை நீக்கிக் கொண்டாள்; ஆகவே அந்த நிலையை நீக்கிய பின் தம்பியாருக்காக தான் கன்னியாயிருத்தலின் வேறு திருமணம் முடிக்கவும் விரும்பவில்லை. அவ முற்றிலும் தனது வாழ்வைத் தவமாக்க விரும்புகின்றள். ஆகவே இந்த ஒரு விருப்பத்தால் தனது வாழ்வு முழுவதும் தவமாக மாறிக் கொள்கின்றது. தவ வாழ்வு என்றல் இன்று நீங்கள் உலகில் காணும தபோதனிகள் எனப்படும் மாதர்கள் தேவிகள் போன்றிருக்கவில்லை.

தவம என்று சொல்லி அவமே பெருக்கும் அம்மாக்கள் இன்று நிறைய உண்டு. அவ அப்படித் தவம் செய்யவில்லை. அவவினுடைய தவமெல்லாம் சிவதொண்டாகவே இருந்தது. அத்தொண்டில் அவகொண்ட உறிதி அளப்பரியது. என்னல் எழுதிக் காட்டி விளங்கிடப் பண்ண முடியாது.

இன்று எங்கடை மாதா ஜீயள், தேவியள்' சாமி அம்மாக்கள்ன் சகோதரியள் ஐயையோ! அத்தனை அம்மாக்களும் ஒரு கோவிலிய விளக்குமாறு பிடித்து கூட்டினவையோ? எனக்குத் தெரியாது! நாந் காணக் கூட்டினவை எங்கடை குஞ்சியாச்சி பெரியாச்சி மச்சாள் பெரிக் மாமி அவயள். உண்மையில் அதுகள் யாரும் யாழ்ப்பாணத்திலுள்ள எந்த ஒரு கோவிலையும் கூட்டாமல் விடவில்லை. திலகவதியாரும் நான் கண்ட இந்த எங்கடை சீ தேவியள் வழி தான் நின்றவ. நெடுகச் செய்தவ.

ஆனல் இன்று மேல் நாட்டு நாகரீகத்தில் உடை நடை பாவனையால் மூத்ததேவிகள் செல்விகள் கூட்டாததற்காக அவையளை மேடைக்கு அழைத்து மாலை போடக்கூடாது கும்பிடக்கூடாது வரவேற்கக் கூடாது என்றதல்ல. எல்லாம் செய்யலாம். அதில் ஒரு பிழை இல்லை கூப்பிட்டால் அவையளும் வருவினை தானே!

ஆனல் எங்கடை மாமியாச்சி குஞ்கியாச்சி பெரியாச்சி ஆச்சி இவையள் கோவில் கூட்டிய பணிக்காக உனக்கு ஒரு பொன்னடை போடுறன்? இந்த வைரவ கோவில் வாசலிலை என்றல் ஓம்வாரும் என்று விளக்குமாறு தூக்கிக் காண்பிக்கப்பட்டது. அதோடை பயந்து நான் அகதக்கதைவிட்டுட்டேன்; அந்த நாகரீகமற்ற ஏதும் வஞ்சனை சூது அறியாத ஏழை "சீ" தேவிகளை அப்படியே விட்டுடுவம். அதுகளுக்கு ஏன் பொன்னடை!

போனதெல்லாம் போகட்டும் இனியாகிலும் புத்தியாய் நடப்பம் என்று பெரியோர்கள் சொன்ன மாதிரி அடியேனும் நல்ல சைவசீலம் விளங்கிக் கொண்ட குடியில் பிறந்துள்ள கன்னிப் பெண்களுக்கு இவற்றை மிகு தாழ்வுடன் எடுத்து மொழிகின்றேன்.

திலகவதியார் அம்பொன்மணி நூல் தாங்காது அனைத்து உயிர்க்கும் அருள் தாங்கி தனது வீட்டில் தவமிருந்த பெருமையாலே தான் திருநாவுக்கரசர் சமணசமய பற்று விட்டு வந்து சைவ நெறி சார்ந்து தவம் பெருக்கி சிவம் பெருக்கும் சீலமுடன் வாழநேரிட்டது.

எனக்கும் ஓர் கவலை உண்டு. முதல் நாள் நல்ல கறியுடன் உணவு மூன்று நேரமும் சாப்பிட்டு அடுத்த நாள் ஒரு கோவில் வாசலில் நாம் தமிழர் விடுதலைக்காக சத்தியாக்கிரகம் இருக்கின்றோம் என்று பொழுது படுமட்டும் உண்ணவிரதம் இருந்து காட்டிய அவையளாலை ஒன்றும் செய்ய முடியாமல் போய் விட்டது! நாங்களும் நெடுக நெடுக இலங்கையில் இருந்து அடி வாங்கி அலுத்துப் போனம். இந்தமாதிரி அடிவிழாமல் காப்பாற்ற உண்மை விழைவின் தவம் தான் செய்ய முடியும். அதுவும் பிறரறியா வகை நமது மனையில் தவம் இருப்பதால் தான் முடியும் என்பதை பெரிய புராணம் காட்டுறது. கந்தபுராணம் வழி மொழிகிறது திருக்குறள் உறுதி படுத்துகிறது. அரசியல் வேட்டைக் காறர் நெடுக நெடுக சுதந்திரம் பேசிப் பேசி நியாயமான அளவிற்கு எமது இனத்தை ஓர் அவமான கதிக்குள் கொண்டு வந்து விட்டு தாங்கள் தங்கள் செல்வாக்கைப் மூளையைப் பாவித்து அடிவாங்காமல் தாங்கள் தப்பிக் கொண்டனர்.

இந்த ஒரு பீடையான நிலை நெடுகப் பரவ விடக் கூடாது. ஆகவே நீங்கள் நாலுபேராதல் துணிந்து உண்மையாம்படி தவம் இருந்தால் நமது இனம் உய்யும். மதிப்புக் கிடைக்கும். நாம் எல்லாரும் பகை நீங்கி வாழலாம். ஏமாற்றம் இல்லாத ஏதுமொரு அரசியல் நோக்கமும் இல்லாத தூய தவம் தான் இதற்கு வழி." முயன்று பாருங்கள். முருகன் அருள் தானே வந்து உமக்குத் தலைப்பட்டு வேண்டியதெல்லாம் தரும்.

## நாயன்மார் கட்டில் நடந்தது

நாயன் மார் கட்டில் எழுந்தருளி இருக்கும் வெயில் உகந்த பெருமானுக்குச் சில நாள் முன்பு நடந்த மணவாளக் கோலத் திருவிழாவில் சுவாமிக்கு மின் ஒளி பாய்ச்சும் செயல் (எலெக்றிக் போக்கிங்) நிற்பாட்டப் பட்டது! அன்றைய விழாவில் தேங்காய் நெய்விளக்காகும் தீவர்த்திகள் பாவிக்ககப்பட்டன. அற்புதமான எண்ணெய் விளக்காகும் தீவர்த்திகளுடன் எம்பெருமான் வெயில் உகந்த விநாயகன் திருஉலா வெளி வந்த காட்சி அற்புதமாக இருந்தது என்றும் அந்தக் காட்சி கண் நிறைந்து உள்ளத்துத் தவம் நிறையும் காட்சியாகவும் இருந்தது என்றும் என்னிடம் பல பெரியோர் பெருமையுடன் பேசிக் கொண்டனர். நானும் தவநெறி தான் எம் ஆலயத்து மிளிரட்டும் எனக்கொண்ட என் ஆவலுக்கு அங்காதல் ஒரு விடிவை என்நாயகன் விநாயகன் செய்வித்துக் காட்டினனே என என் உள்ளம் மலர்ந்தேன்.

நல்லூரிலும் தண்டிகைத் திருவிழாவன்று ஆறுமுகத்து ஐயன் மீது மின்ஒளி பாய்ச்சப் படவில்லை எனக்கேட்டு உள்ளம் மலர்ந்தேன் அன்றுபோல் என்றும் எம்அப்பனுக்கு நடைபெறட்டும்.

## குருக்கள் ஐயா கொதிக்கிறர்

குருக்கள் ஒருவர் மொட்டைக் கடிதமூலம் எனது பத்திரிகையை உடன் நிறுத்தும்படி கேட்டுள்ளார். நான் குருக்கள்மாரை தம்பிரான் சுவாமியளைப் பட்டத்துத் தேவியளை திட்டறேனம். இதை விட்டுட்டுத் தமிழ் எம் பிக்கள் திருப்பணிச் சபையார் தகுதிபற்றி எழுதட்டாம். அப்படி அல்லாது பத்திரிகையைத் தொடர்ந்து வெளியிட்டால் எனது ஜாதகத்தை வடிவாய்க் கணித்துக் கொண்டு வெளியிடட்டாம். அதற்கு நான் பயந்து எந்தக் கோவிலிற்கு நேர்த்திக் கடன் செய்ய!

திருஞானசம்பந்தப் பெருமானது புராணத்தை அவர் பாடியருளிய தேவாரங்களுடன் பதிப்பித்து வெளியிட்டபின் எனது சிறுகொட்டிலில் இந்தத் திருப்பணியும் கைகூடியது.

அவன் அங்கு அருபியாக உறைகின்றன் என்பது என் மனத்துணிபு காலையில் எழுந்து அவன் திருப்பாதத்துச் சூட்டும் சிறியமலரும் என் கவலைக்கண்ணீருமன்றி வேறு அவன் அங்கு பெறன்.

ஆகவே தீபத்தின் ஜாதகப் படி குருக்கள்மார் கோவில்களில் தங்கள் முன் ஒலிபெருக்கியை வைத்து கோமாளிக் கூத்தாட அது கண்டு நாணம் கொண்டு கோவிலை விட்டு அகன்று போன தெய்வங்கள் இனித் திரும்பி வரும். வேதநெறி தழைக்கும். சைவசீலமும் பெருகும். அதனல் தமிழினம் இனியும் அடிவாங்காது. சுதந்திர மடையும். இதுவே தீபத்தின் ஜாதகம் சரியே! இதுவன்றி வேறு தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சிப்போய் கலி மெலிய அழல் ஓம்பும் அப்பூதி

**சென்ற இதழில் தெரிவித்தபடி அஞ்சிப் போய் கலிமெலிய அக்கினி வளர்த்த அந்தணர் பெருமானுடைய வரலாறு இதுவாகும். அந்தணர் முதல் அனைவரும் ஓதினால்கலி நீங்கி உய்ய வழியாகும்.**

ஆகவனீயம் காருகபத்நியம் தக்கிணக் கினியம் என்னும் மூவகை அக்கினிகளை அந்தணப் பெரியோர் வளர்ப்பவர். அவரது அந்தத் தொழிலால் வானம் சிறப்பது, மழை பொழிவது. மங்கலம் நிறைவது. தீங்குகள் அகல்வன. உலகில் மக்கள் ஒற்றுமையுடன் நீதியுடன் வாழ அவர் செயல் வழிதருவன.

அது எப்படி முடியும்? என்னென்று அத்தாட்சிப் படுத்துவீர்? என்று என்னைக் கேட்டால் நான் அதற்கு பதில் உடனக அதை நிருபித்துக் காட்டும் வகை சொல்ல இயலாது என்றாலும் பெரிய புராணத்தை நன்கு விளங்கிய பிற்பாடு அது கைகூடக் கூடிய ஒரு செயல் தான். அன்று அச்செயலை அவர்கள் புரிந்து நாட்டை மக்களை நல் நிலையில் வைத்திருந்தனர் என்பது தெளிவாயிற்று. ஆதலால் அந்த பெருமக்கள் வரலாற்றை இன்றுள்ள சந்ததியினரும் தெளிந்து கொண்டு நன்மையடையலாம் என்ற விருப்பால் இதை இங்கு தருகின்றேன்.

உலகுய்ய நடமாடிட வல்ல சர்வேசுவரனுய சிவபிரானுக்கு அன்பரும் இவ்வுலகில் தமக்கென வந்துற்ற புகழின் பெரும் சிறப்புடையவரும்; எல்லையில்லாத தவத்தில் மிகுந்தவரும்: ஆண்ட சீர் உடைய திருநாவுக்கரசரின் திருப்பாதமே மெய்ப்பொருளாக அடைந்து அவரை தாம் நேராகக் கண்டு அறியாத முன்னரே காணப்பெறும் சிறப்புடைய காதல் அவர்பால் கொண்டிட அதனல் அவருடன் கலந்த அன்பினராயுள்ளார் திங்களூரில் வந்த அப்பூதி அடிகள் என்னும் அந்தணர் பெருமகனர்.

இயல்பில் எவரிடமும் பொருந்தும் களவு பொய் காமம் கோபம் முதலிய எல்லாக் குற்றமும் தன்னை அடையாது நீக்கிக் களைந்து கொண்டவர். வளம்பெருக்கும் இல்வாழ்க்கையின் நிலையினை உடையவர். தனது இல்லத்தில் தனதாக உள்ள கொத்து பறை யார் தராசு முதல் பிள்ளைகள் பசுக்கள் எருமை மற்று தன்னிடத்து உள்ள பொருள் எல்லாம் திருநாவுக்கரசரின் பெயரே சொல்லும் இப்படியாகிய வகை ஆவைகட்கு அவர் பெயர் தொனிக்க நாமமிட்டு; அதனல் தன் வாழ்வு முழுவதும் திருநாவுக்கரசர் மயமாகும் அந்த ஒழுக்கம் மிகுந்த வழியினை உடையவர்.

திருநாவுக்கரசர் பெருமானின் வடிவுதான் காணுதிருந்தாலும் சீர் மன்னிய நாவுக்கரசர் பெருமானின் அடிமைத் தன்மையும் அவர்க்கென எம்பெருமான் அருள் புரிந்த வகையும் கேட்டு அவர் நாமத்தால் இப்பூமியில் சிறந்து விளங்கும் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாக உள்ள முடிவிலாத தருமங்களைச் செய்து நல்முறைமையால் வாழும் நாட்களில்

மலையரசன் புத்திரியாய உமையம்மை எனும் பெண்யானையை எம் இடர்தீர அருள்புரியும் கணபதியை அருளவேண்டி ஆண்யானை வடிவுகொண்டு புணர்ந்த சிவ பிரானின் பழனம் என்னும் தலத்தைப் பணிந்து பணிசெய்து திருநாவுக்கரசர் தன் உள்ளத்து உறுதியுடைய காதலால் பிறவானமுமான எம்மை உடைய சிவபெருமானின் திருத்தலங்கள் வணங்கிடும் விருப்பினெடும் திங்களூரின் அருகாக ஓர் நான் வழிக்கொண்டு வருாவர்

அளவிலாத மக்கள் போக்குவரத்து ஒழியாத அவ்வழியின் கரையில் அருளாளரின் இரங்கிடும் உளம் ஒத்த தண்ணளி மிகுந்துள்ளதாய் கொடுமைமிக்க இளவேனிக் காலத்து வெய்யிலின் கொடுமை நீக்கி நீழல் செய்து; நீர் நிறைந்த நீர்த்தடாகம் போன்று குளிர் தூங்குகின்ற பரப்பினை உடையதாய்: அங்கு செல்வார்க்கு பலவகையாலும் குளிர்மை தாகசாந்தி இவைபோன்ற வளம் கொண்ட நீழல் தரும் அப்பூதி அடிகள் தம் பெயரால் நிறுவிய தண்ணீர் பந்தரை திருநாவுக்கரசர் வந்தணைந்தார்.

தண்ணீர்ப்பந்தரை வந்தணைந்த திருநாவுக்கரசர் தென்றல் காற்றினைப் போன்ற குளிர்ச்சியாய தண்ணீர்ப்பந்தருடன் அமுதம் போலும் தண்ணீரும் பார்த்தருளி; இப்படியும் கருணையுடன் யார் தருமம் செய்வார் என தன் சிந்தை களிப்புற வரும் அவர்க்கு ''திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தர்'' என மிக அழகின் விளக்கமுடன் எழுதியுள்ளதனை எம்பக்கரிலும் இருப்பதைத் தாம் கண்டார். இதன் தன்மை கண்டு;

அதிசயித்து அங்குறைவார் தமைநோக்கிஇப்பந்தரை இப்பெயரிட்டுஎழுதினர் யார் எனக்கேட்ட எம்பிரான் திருநாவுக்கரசர்க்கு; அப்பந்தரின் வரலாறு அறிந்தார்கள் ''ஐயனே! இங்கு இப்பந்தரை ஆண்ட அரசு எனும் பெயரால் சொல்லற்கரிய சீருடைய அப்பூதி அடிகளார் செய்து அமைத்துள்ளார். இதுமட்டன்றி இன்னமும் வேறுதருமங்கள் தவறில்லாது இவ்வூரில் எங்கும் உள்ள சாலைகள், குளங்கள், சோலைகள் யாவுமே திருநாவுக்கரசர் என்னும் பெயரால் ஆக்கியுள்ளார் என்றார்கள்.

என்று அவர்கள் சொல்ல; திருநாவுக்கரசர் அது கேட்டு; இப்படிச் செய்வதற்கு என்ன கருத்தாகும்என்றுஅங்கு நின்றவரைநேராகப்பார்த்துஅந்தஅப்பூதி அடிகள் எவ்விடத்தார் என அவர் இருப்பிடம் வினவலும்; அவர்கள் அவரை நோக்கி ''ஒங்கிய நூல் அணிந்த மார்புடைய அத்தணர் அப்பூதி அடிகள்எனும் அவர் பழமை வாய்ந்த இவ்வூரவரே: அவர் இப்பொழுது தான் இவ்விடம் விடுத்து தனது மனைக்கு போயினர். அந்த மனையும் தூரவல்ல மிகவும் அணிமையில் உள்ளது'' எனச் சொன்னர்கள்.

அதுகேட்டு அங்கு நீங்கி எம்முனிவர் பெருமான் திருநாவுக் கரசரும் சென்று அப்பூதி அடிகளார் தங்கிய திருமனையின் முன்வாயிலின் சார்வாகப் போதலும் அப்போது; திருநீறும் உருத்திராக்கமும் அணிந்து நோக்கமும் சிவனுக்காகக் கொண்டு வாழும் கோலக்குறியுடன் ஒருவர் தம் வாயிலின் வெளிவந்தமை கண்டு; உள்ளிருந்த திங்களூரின் அந்தணர் பெருந்தகை அப்பூதியாருக்கு எம் தலைவாய்தலின் யாரோ எங்கள் பெருமானுடைய ஆள் வந்துள்ளார் எனக் கூறக்கேட்டு உடன் வெளியே வந்தார்.

விரைவாக அப்பூதி அடிகள் வந்தணைந்து திருநாவுக்கரசரை உண்மை தெளியும் ஓர் அடியவர் என நினைந்து திருவடிவணங்கிடலும்; அப்பூதியார் தம் திருவடிகள் பணியும் முன்பே தாம் பணியும் திருநாவுக்கரசரை எம் அந்தணர் பெருமான் அப்பூதி அடிகள் நேர் நோக்கி! ''ஐயனே முடிவிலாத தவம் யான் செய்துள்ளேன் போலும், உமது காட்சியால் கருணை பொழியும் அருள் முகமுடையீர்! என்மனையில் இன்று வந்தருளிடற்கு நான் செய்த பாக்கியத்தின் வடிவுடையீர் இன்று நான் உமக்கு செய்ய வேண்டிய பணிவிடை என்னகும்'' எனக்கேட்டார்.

இவ்வாறு கேட்கும் அப்பூதி அடிகளாற்கு திருநாவுக்கரசர் சொல்வார் ஐயனே? யாம் மேருமலையை வில்லாக உடைய பெருமானைத் திருப்பழனத்துச் சென்று வணங்கி வருகிறோம்: வழிக்கரையில் நீர் வைத்த வளம் வாய்ந்து குளிர் தருகின்ற நிழலுடைய தண்ணீர்ப்பந்தரும் கண்டு அதைப் போன்று நீர் இன்னமும் செய்கின்ற அறங்கள் பிறவும் கேட்டு உம்மைக் காணுப்படி வந்துள்ளோம் எனச் சொல்பவர் பின்னரும் அவரை நோக்கி

ஆறணியும் சடைமுடியுடைய பெருமான் அடியார்க்கு எனநீர் வைத்த ஈறில்லாத பெரும் திருவுடைய தண்ணீர்ப்பந்தரில் உமது பேரை எழுதாது வேறொரு பேர் முன்னக எழுதவேண்டிய காரணம் என்ன ஆயிற்று! அதனை நீர் கூறும் என்று நேரிட்டு அப்பூதியார் கொள்கைக்கு எதிர் மாறனதொரு போக்காக கேட்டார் குறைவிலாத மொழிக் கரசர் எம்பிரான் நாவுக்கரசர்.

அதனை அங்கு நின்ற அந்தணர் பெருமான் அப்பூதியார் கேட்டலும் உடன் தான் கொண்ட உறுதியின் அறிவுகலங்கி மனமுடைந்தவராய் அவரை நோக்கி ஐயனே! இதென்ன இது! நல்லதொருவார்த்தை உம் வாயால் நீர் சொல்லவில்லையே! நாணம் இல்லாது கொடிய சமணப்பாதகருடன் சேர்ந்து ஒருங்குடன் செயல்பட்ட அரசனின் சூழ்ச்சியை தமது திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவரான பெரியோர் திருநாவுக்கரசரின் நாமத்தையோ நீர் வேறு ஒருபேர் எனச் சொல்வது? என்று கூறி பெரும் பதட்டமுடன் கோபங் கொள்வாராய் மீண்டும்அவரை நோக்கி

நம்மையுடைய எம்பெருமான் திருவடிக்கீழ் நயந்து புரிந்த திருத்தொண்டின் செயலால் இந்த உலகத்தில் நாம் தப்பிப் பிழைக்கலாம் என்று என்போல்பவரும் தெளிந்தறியச் செம்மையான தொண்டு புரிந்துகாட்டிய திருநாவுக்கரசர் பெருமானின் திருவுடைய பெயர் எழுதிட ''வேறொரு பேர் அது வென்ற'' கொடும் மொழியினை இன்று உம்மிடமிருந்து யான் கேட்க நீர் சொன்னீரே என. சரவிலாத தம் உள்ளத்துக் கொண்ட கோபத்துடனை விறுவிறுப்புடன் மொழிந்து பின்னர்.

பொங்கிடும் கடலிலே கட்டிய கல்லினுடன் மிதப்பில் போந்து கரையேறிய அவர் பெருமையை நெற்றியிற் கண்கொண்ட எம்பெருமானது இந்த உலகில் யார் அறியாதவர் உளர். அஃதிருப்ப மங்கலம் நிறைந்த இந்த திருவேடத்துடன் நின்று இவ்வகை நீர் மொழிந்தீர். எந்த ஊர் நீர் இருப்பது! நீர் தாம் யார்? உண்மை சொல்லிடும் என்றார் அப்பூதி அடிகளார்.

திருவுடைய அந்தணர் பெருமான் அப்பூதியார் இது மொழிந்திடலும் திருநாவுக்கரசர் அப்பூதியாரின் பெருமை அறிந்து பதில் சொல்வார். ''நான் பற்றிய புறச்சமயத்தில் நின்ற கொடுமை நீங்கிக் கரையேறிட எனக்குத் தரப்பட்ட கொடும் சூலை நோயினல் ஆட்கொண்டிட ஆற்றது அப்பனை வந்து அடைந்து உய்ந்த இதுதான் வழி என முன் தெளியும் உணர்விலாத சிறுமை உடையேன் நான்'' என்றார்.

திருநாவுக்கரச சுவாமிகள் தம்மை அறிய இவ்வணம் உரைத்தலும் அதுகேட்ட அப்பூதி அடிகளாரும் தனது கைமலர்கள் உச்சிமேல் சூடிடக் கண்களின் நின்றும் அருவி நீர் பாய்ந்து வடிந்திட மொழி குழறி உடம்பெல்லாம் உரோமம் புளகமாகப் பொலிந்திட இப்பூமியின் மீது வீழ்ந்து திருநாவுக்கரசருடைய திருப்பாதக மலர்களை உச்சி பொருந்த தம் கையால் அணைத்து வணங்கிக் கொண்டார்.

இவ்வாறு வீழ்ந்து வணங்கிய அப்பூதி அடிகளாரை திருநாவுக்கரசரும் எதிர் வணங்கி தம் கரங்களால் எடுத்தருள அதுவேளை எழுந்து கொண்ட அரிய சிவநெறி நின்ற அப்பூதி அடிகளார் வறுமையுற்றார்கள் அருநிதியம் பெற்றார் போல் மலர்ந்து முற்றவும் களிகூர்ந்து முன்னின்று கூத்தாடி மனதில் உற்ற விருப்புடன் எம்பெருமான் திருநாவுக்கரசரை சூழ்ந்து ஓடினர் துதித்துப்பாடினர்.

மனதில் மூண்ட பெருமகிழ்ச்சியினல் எது முன் செய்வதென அறியாதே உடன் தன் மனையிடத்துச் சென்று தனது மனைவியார்க்கும் மக்களுக்கும் ஆண்ட திருநாவுக்கரசர் எழுந்தருளிய மங்கலமொழி உரைத்துக் தன்னிடத்து அவர்பால் ஆர்வமுறக் கொண்ட பெரும் சுற்றமெலாம் அழைத்துக் கொண்டு மீண்டு இங்கு வந்து.

மனைவியாருடன் மக்கள் மற்றும் உள்ள சுற்றத்தார்கள் அனைவரையும் அழைத்து வந்து திருநாவுக்கரசர் பெருமானை வணங்கி அடங்காத காதலுடன் திருநாவுக்கரசர் பெருமானை இல்லத்து உள்ளே எழுந்தருளுவித்து முன்னக அவருடைய திருவடிகளை நீர் கொண்டு விளக்கிய மலர்களிட்ட பாததீர்த்தத்தை தங்கள் மேனியிலும் தெளித்து உள்ளும் பருகி மகிழ்வால் பூரித்தார்கள் பின்னராக.

அவரை ஓர் ஆசனத்தில் அமர்வித்து பூசனைகள் புரிந்து விருப்பினுடன் வாசம் நிறைந்த திருநீற்றை அவர் திருமுன் ஏந்தி அந்நீறு எடுத்து தம்மீது அணிந்து; மனம் தழைத்திட இத்தேசம் உய்யவந்த பெருமானை திருவமுது செய்வித்திடும் நேசம் பெருகிடலாலே அவர்க்கு அதனை விண்ணப்பஞ் செய்திட திருநாவுக்கரசரும் அதற்கு உடன்பாடாயினர்,

தவம் செய்திடும் பேரருளாளர் இசைவுற்றபோது எம் அப்பூதி அடிகள் திருவுடைய மனைவியாரை நோக்கி நமக்கு தனது பாட்டில் வந்த புண்ணியப்பேறு இருந்த வண்ணம் என்னேயாகும்: இப்படி நாம் நினையவில்லையே என்று தம் தவப்பேற்றைச் சிறப்புறக் கூறி இந்த அருளும் அருமை திகழும் சிவனருளால் வந்தது என்று மலர்ந்து நாம் எல்லாம் இனி உய்வோம் என்று பேசி மனம் மகிழ்ந்து கொண்டு எம்பிரான் நாவுக்கரசர்க்கு திருவமுது ஆக்கலுற்றார்கள்.

தூய நல்லகறிகளான அறுவகைச் சுவை பெறவாக்கி அத்தோடு நன்மையாய இனிய அமுதும் சமைத்து எம்பிரான் திருநாவுக்கரசர் அமுது செய்தருள தங்கள் பிள்ளைகளில் மூத்ததிருநாவுக்கரசினை வாழை மரத்தில் விரிந்த தறுவாயில் உறும் பொன்போலும் அழகிய குருத்தைக் கொண்டு வா என்று விரைவாக விட்டார்கள்.

நல்ல நெறியுடைய தந்தை தாய் வாழைக்குருத்தரிந்து வரும்படி செலுத்தியிட நான் இதனைச் செய்யப் பெற்றது என் பெரும்பாக்கியம் என்று உடனேவிரைந்து சென்று தோட்டத்தினுள் புகுந்து பெரிய வாழை மரத்தின் குருத்தை அரிந்திடும் பொழுதினிற் கூரிய பற்களுடைய

ம ப பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகபாம்பு ஒன்று அப்பிள்ளை வருந்தித் துடித்துச் சோர்ந்திடும் படி அவனது அழகிய கையில் தீண்டியது,

மூத்த திருநாவுக்கரசு என்னும் அம்மைந்தன் கையினில் கவ்விக் கடித்துச் சுற்றிக் கணசிவத்துச் சீறுகின்ற அப்பாம்பை பிள்ளை கையை உதறி வீழ்த்தி மிக்க பதைப்போடும் "இந்தப் பாம்பு கடித்த கொடும் வேகத்தால் நான் மயங்கி வீழ முன்பு யான் ஓடக்கூடிய வேகத்தால் ஓடிச்சென்று; நான் அரிந்தெடுத்த இக்குருத்தை என் தாயார் கையில் கொடுப்பேன்" என்று மயங்கிடும் நிலையிலும் நல்வேகமுடன் ஓடிவந்தான்,

நாகத்தின் நஞ்சுதரும் கொடுவேகத்தால் ஓடிவருவான் அவன் வேகத்திலும் நஞ்சின் வேகம் முந்த அப்பாவென நொந்து வருந்திக்கொண்டு வரும்பொழுது; "எனக்குப் பாம்பு கடித்தது பற்றி; யார்க்கும் அரிய தபோதனர் அமுதுசெய்திடத் தாமதமேற்படுமாதலரல் சொல்லேன்" என்று நல்நோக்கமாகத் திருந்திய கருத்தினோடு செழுமைமிக்க தமது மனையில் சென்று புகுந்தான் அப்பிள்ளை. அந்தவேளை அவனுக்கு;

நெருப்பினைப் போன்று சுடுகின்ற நஞ்சு முறையே ஏறித் தலையில் கொள்கின்ற வகையாக அந்தத் தடுக்கொணாத ஏழாவது வேகத்தின் விளைவால் வரும் கொடுமையால் பல்லும் கண்ணும் மேனியும் கருகித் தீந்து வாயால் தெளிவாய் சொல்லும் வாக்கும் தடுமாறி மங்கி உயிர் விடும் நிலையில் மயங்கிவிழுகின்றவன் நாவுக்கரசர் உண்டிடும் பாத்திரமாய அக்குருத்தைத் மெதுவாக தாயார் முன்பு வைத்து பூமிமீது சோர்ந்து வீழ்ந்தான்;

சோர்ந்துவீழும் மகனைக் கண்டு தாயாரும் தந்தையாரும் உளம் பதைபதைத்து பிள்ளையை உற்றுப் பார்த்து உதிரம் சோர்ந்திடும் வடிவும் மேனியில் விளங்கிய குறியும் கண்டு இப்பிள்ளை "நஞ்சினால் இறந்தான்" என்று தெரிந்தும் அதனால் ஒரு நடுக்கமுமின்றி அக்கறையின்றி; பிள்ளை இறந்த கவலை துயர்யாவும் மறைத்து மறந்து கொண்டு பதில் எம்பிரான் தொண்டர் திருநாவுக்கரசர் திருஅமுது செய்திடற்கு வேண்டிய கருமங்களைச் செய்வார்;

அருமையில் பெற்று வளர்த்திடற்குப் பெருமையாய நற்குணத்தால் நீடித்த அந்த ஓர் மகனை எடுத்துப் பாயினுள் வைத்து மூடிக்கட்டிக் கொண்டு சென்று தமது வீட்டுக்கோடியின் பின்முற்றத்தில் பக்கராக மறைத்து வைத்து பின்னர் கொஞ்சமும் அவர் இதனை தெரியாமல் நாம் அமுதுசெய்விப்போம் என்று கூறி மிக்க வலிமையுடைய தொண்டர் திருநாவுக்கரசர்பால் அன்பினால் பெருகிடும் விருப்புடன் விரைந்து வந்தார்கள்.

எம்பெருமான் திருநாவுக்கரசர் வந்து அமுதுசெய்திட "காலம் தாழ்கின்றதே" என்ற சோறும் கறியும் எல்லாம் அழகாக ஓரிடத்துச் சேர வைத்து பதைப்புடன்நிகரிலாத சீருடைய தொண்டர் எம் திருநாவுக்கரசர் பெருமான் முன் பணிந்து எழுந்து; எம்பிரானே தேவரீர் திருவமுது செய்து எம் குடிகள் முழுவதையும் உய்யக் கொள்வீர்" என்று அவர்கள் கூறிடக் கேட்டுககொண்ட;

அரும்தபோதனராய திருநாவுக்கரசர் எழுந்து தமது செம்மையாய திருவடியினை விளக்கி, வேறொரு திருத்தமுடைய ஆசனத்து ஏறி வீற்றிருந்து தம்முன்பாக வாழை இலையாகும் பாத்திரம் தூய்மையாக்கும் முன்னர் அங்கு இருந்து திருவெண்ணீறு அணிந்து; திருவருளின் இயல்பில் நின்ற இருவர் அப்பூதி அடிகளார்க்கும் அவர் மனைவியார்க்கும் பொருந்திய திருநீற்றைக் கொடுத்து அவர் பிள்ளைகளுக்கும் திருநீறு கொடுத்திடும் போதினில் அவர் மக்களில் இளைய திருநாவுக்கரசு மட்டும் திருநீறுவாங்கியமை கண்டு;

ஆதியான நான்கு வேத நூல்களின் உண்மையை உணர்ந்துகொண்ட அப்பூதி அடிகளாரை திருநாவுக்கரசர் நோக்கி அவரின் பிள்ளைகள்மேல் கொண்ட அன்பால் இவர்க்கு மூத்த பிள்ளையையும் எமக்கு காண்பியும்; அவர்க்கு நான் முன்னே நீறு சாத்த என்றலும் அதுகேட்ட அப்பூதி அடிகள் மூத்த மகனுர்க்கு நிகழ்ந்த தன்மை யாதும் ஒன்றும் பேசாதவராகி சுருக்கமாக ஒரே வார்த்தையில் "இப்போது இங்கு வர அவன் உதவான்" என்று கூறினர்.

அந்த "அவன் இங்கு இப்போது உதவான்" என்ற வார்த்தை கேட்டபோது நெற்றியில் கண்ணுடைய சிவபிரான் அருளால் எம் திருநாவுக்கரசர் தமது செப்பமாய திருவுள்ளத்து ஓர் தடுமாற்றம் சேரவந்திடுதலைக் கண்டு அப்பூதியாரை நோக்கி "உமது இந்தவார்த்தையை என் உள்ளம் ஏற்காது. உமது மகன் இங்குவர உதவாமைக்கு என் செய்தான்? இதற்கு ஒன்று உண்டாகுமே? உண்மையை எடுத்து விரித்து இங்கு ஓதிடும்" என்னலும் அதுகேட்ட அப்பூதியாரும் உள்ளவாறு சொல்கின்றார் நடுக்கமுங்கொண்டு பெரிதும் பயந்து,

பெரியவர் திருநாவுக்கரசர் எம்மிடம் அமுதுசெய்திடும் பேறு பிழைத்திடும்படி என்னோ காரியம் வருவது இதைச் சொன்னால் என்று அதைச் சொல்லாது விடப் பார்த்தார் என்றாலும்; எம்தபோதனர் கேட்டிடும்போது உண்மையே தெரிவுறச் சொல்லல் வேண்டும் என்னும் சீலத்தினால் இதைச் சொல்கின்றேன் என்னுகுமோ என்ற பயத்துடன் தன்மனம் நொந்து; எம் அப்பன் நாவுக்கரசரை மிக்க பரிவுடன் வணங்கி தம் மைந்தர்க்கு உற்றது சொன்னார் அப்பூதி.

நாவினுக்கு அரசர் பெருமான் அதனைக் கேட்டு "ஐயரே நன்று நீர் புரிந்த வண்ணம்" யாவர் இத்தன்மையாகச் செய்தார் என்று முன்னாக எழுந்து சென்று உயிர் நீங்கிய சவத்தை நோக்கி எம்பிரான் சிவன் அருளும் வண்ணம் எம் அப்பனைப் போற்றிடும் நல் இசையுடைய "ஒன்றுகொலாம்" எனத் தொடங்கும் தேவாரப் பதிகம் பாடி நாகபாம்பின் நஞ்சினை நீக்குவித்தார். பிள்ளை உயிர்பெற்றெழுந்து கொண்டான்.

கொடிய தீப்போலும் நஞ்சு நீங்கிட இப்பொழுது உய்ந்தெழுந்த அப்பூதியடிகளாரின் திருக்குமரன் மூத்த திருநாவுக்கரசுவும் தான் கொண்ட நித்திரை நீங்கி எழுவான்போன்று உயிர் பெற்றெழுந்து இடபத்தை வாகனமாகக் கொண்ட பெருமான் ஆட்கொண்ட திருநாவுக்கரசின் செவ்விய மலரடிகளை வணங்கிடக் கண்டு அப்பிள்ளைக்கு எம்பெருமான் சிவனின் அருட்புனிதம் நிறைந்த திருநீற்றைக் கொடுத்தனர் திருநாவுக்கரசர்.

பிரிந்த ஆவி மீளவும் பெற்ற பிள்ளையைக் காண்பார் யாரும் சிவ தொண்டின் நெறி இப்படியாயது எனக்கைகுவித்துப் போற்றி வாழ்ந்தார்கள். அங்கு நின்ற அப்பிள்ளையைப் பெற்றார் யாவரும் தாங்கள் அறிய முடியாத பெருமையின் அன்பர் திருநாவுக்கரசர் தம்மனையில் அமுது செய்வதற்கு இப்பிள்ளை சிறிது இடையூறு செய்தானே என்று தம் சிந்தை நொந்தார்கள். எப்படி இருப்பது மெய்யடியவராய திருநாவுக்கரசர் பால் கொண்ட பத்திமைகாண்க.

இவ்வாறு பிள்ளை உயிர்பெற்றெழுந்தாலும் திருநாவுக்கரசர் தாம் இன்னமும் உணவருந்தவில்லையே என்ற வாட்டத்தினைக் கொண்டு ஏம்பலித்திடும் அப்பூதியாரின் வாட்டத்தினை திருநாவுக்கரசர் பெருமான் உணர்ந்து அப்பூதியாருடைய திருவோங்கிய மனையில் சென்று திருவமுது செய்தருளி

தற்குற்ற தன்மையுடன் இருப்ப அது கண்டு முப்புரி நூல் அணிந்த மார்புடைய எம் அப்பூதியாரும் தம் மனதில் கொண்ட பெருமகிழ்ச்சியோடும் தகுதியின் வேண்டுவன ஆயத்தம் செய்து கொண்டு;

சிறந்தது இதுஎன ஆகமம் புகழ்ந்த பசுவின் சாணம் நீர் இவற்றால் பூமியை பொலியமெ[...]; திகழ்ந்து விளங்கிடும் அழகிய கோலமும் இட்டு சிறப்புடன் தீபமும் வைத்து அங்கு இச்சம்பவத்திற்கே காரணமாகிய வாழையின் நீண்ட குருத்தினை விரித்து நீரால் மகிழ்வுடன் அதனைக் கழுவி அரிந்த தண்டுப் பக்கம் திருநாவுக்கரசர் பிரானின் வலப்புறமாக பொருந்த முறையின் வைத்தார் அப்பூதி அடிகள்.

திருந்திய வாசமுடைய நீரை கரத்தெடுத்து திருநாவுக்கரசர் பிரானிடம் கொடுத்திடலும் அதனை ஏற்று தம் திருக்கைகளைக் கழுவும் பெருந்தவர் திருநாவுக்கரசர் அப்பூதி அடிகளாரை அவர் பிள்ளைகளுடன் பார்த்து, அரும்பிள்ளைகளும் நீரும் இங்கு அமுது செய்தருள்வீர் என்னலும், எம்பெருமான் நாவுக்கரசர் விரும்பியதை ஏற்றுக்கொண்ட உள்ளத்துடன் அப்பூதி அடிகளாரும் அவர் மைந்தரும் அவர் இட்ட பணியின் படி உடன் திருவமுதுசெய்கின்றார்கள்.

தன் பிள்ளைகளும் அப்பூதி அடிகளாய அந்தணர் பெருமானும் பக்கரில் இருந்து திருவமுது செய்திட மனதில் பெருவிருப்பம் மிகுந்த இல்லத்துள்ள பெண்கள் திருவமுதினை எடுத்துப் படைத்திட; கொந்தவிழ்ந்த கொன்றைமலர்ச் சடையுடைய கூத்தன் எம்பெருமான் அடியாரோடு அருமையாய தமிழாய கடலின் வடிவம் போலும் திருநாவுக்கரசர் அங்கு திருவமுது செய்தருளினர்.

(எத்துணைச் சிறப்பாக இருந்திருக்கும் இப்பெரிய செயல் சிவ சிவா.)

பெரும் தபோதனராய அப்பூதி அடிகள்பால் நற்காதலாய அன்பினை ஈந்து பல நாளும் அவருடன் நட்புரிமையால் கலந்து அங்கு தங்கியருளிய பின்னர் மேன்மையிற் சிறந்த நாவிற்கு அரசராய திருநாவுக்கரசர் திங்களூரின் நின்றும் தாம் புறப்பட்டுத் திருப்பழனம் என்னும் முதிய ஊரை அடைந்து அங்கு கோவில் கொண்ட எம்செல்வனின் பாதத்தை சேர்ந்து நல்ல தமிழினால் ஆய பதிகத்தால் எம்பெருமானைச் சிறப்பித்துப் பாடினர்.

எம்பிரானைப் பாடிடும் அப்பதிகத்துள்ளே எம்பிராற்குற்ற அப்பூதி அடிகளாரின் அடிமையின் பெருமையைச் சிறப்பித்து உண்மையாய நீற்றினை அணிந்த பெருமானை அவர் விரும்பும் பதிகம் "சொன்மாலை" எனத் தொடங்கிப்பாடி அதனுள் "அஞ்சிப்போய் கலிமெலிய அழல் ஓம்பும் அப்பூதிக்கு குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய்" என்னைக் குறிக்கொள்வாய் எனப்பாடியருளினர். அவர் அப்பூதியாரைச் சிறப்பித்த பதிகத்தைக் கீழே தருகிறோம்.

> வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
> பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
> அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
> குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.

இப்பாடலால்மேலாம்பெருநிலை அடையப்பெற்ற அப்பூதி அடிகளார் எல்லையற்ற அன்பால் என்றும் தனக்குற்ற சொல்லப்பெறும் சிறந்த ஊதியமாகத் திருநாவுக்கரசர்பிரான் பாதத்தைப் பெற்றுக்கொண்டார். தனக்குற் காப்பாக கடவுளாகதம் நிதியாகத் திருநாவுக்கரசர் பாதமே தெளியப்பெற்றார் அந்தணரில் மேம்பட்ட அப்பூதிஅடிகளார்.

இவ்வகையாகத் திருநாவுக்கரசர் பெருமானின் நாமம் போற்றி எப்பொருளுமாக நாளும் தமக்கு அடைவன அரும் தபோதனர் திருநாவுக்கரசர் பொற்றாள்களே என்று உணர்ந்து அவர் திருவடிகளே சரணாக உள்ளத்தால் அடைபவர் அப்பூதிஅடிகள். அதுவே தாம் சென்றிடும் செப்பமாய நெறியாக விளங்கிடத் திருவுடைய தில்லைச்சிதம்பரத்தே நின்றாடும் மானின் கண்போல் சிறந்துடைய பெருமாட்டியின் பாகர்எம்பேரொளியாய சிவமூர்த்தியின் நல்ல திருவடிகளை அடைந்து கொண்டார் அப்பூதிஅடிகள்.

## தூங்கிக் கண்டார் . .

3ம் பக்கத்தொடர்ச்சி

டதோ அது எனக்கும் தெரியாது. கண்டனுன் ஒரு இரவில் விடிய விடிய கச்சேரி பிரசங்கம் வில்லுப்பாட்டு இவை செய்து விடியபுறத்திலே கண்மூடியிக்கை ஒருக்கால் கண்டனுன் என்று அம்மாக்கள் ஐயாக்கள் சுவாமியள் சொன்னால் நான் என்ன செய்ய அப்பசரி என்று ஏற்கத்தான் வேணும். அதற்கு பூமாலை போட என்னட்டை காசுக்கு வழியில்லை.

இன்னுமொரு சந்தேகம் வந்துது! எடேய்! இஞ்சைபார் சர்வத்துக் கடைமுதலாளி சவுக்காரக்கட்டி முதலாளி படக்கார முதலாளி பாவாடைக்கடை முதலாளி இவை எல்லாம் எங்கள் குருக்கள்மாற்றை குருகுலத்தின் கட்டிடத்திற்கு அடியிலை கல்லு வைக்கினம். அவை காசு கொடுப்பினம், சரி அது, ஆனால் அதுக்குளை இருந்து படிக்கிற பொடியள் தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்முளே என்றால் இது என்ன விசர்! இஞ்சை இந்த முதலாளி ஐயாமார் எங்களுக்கு அச்சா கட்டிடம் தந்திருக்கு பிறகு ஏன் சிவலோகத்தை? அது தேள்வையில்லை என்று இந்தக் காலத்து உண்டியல் காசையும் உடைத்து எடுத்துபடத்திற்கு ஓடுற பொடியள் நினைக்கும். ஆதலால் அதை அவ்வளவில் விட்டிடுவம்.

திருமூலநாயனாரே தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்முளே என்று பாடத்தொடங்கியவர். அவர் அந்த நாலுவரிப் பாட்டைப்பாடி முதல் மூன்று வரியிலும் தூங்கிக் கண்டார் சிவலோகம் சிவபோகம் சிவயோகம் தம்முளே என்று சொல்லி வந்து நாலாவதிலை தூங்கிக்கண்டார் நிலை சொல்வது எவ்வாறு நான் என்கின்றார், சொன்னவரே அதன் பெருமை அப்படியாவது என்றால் நான் பிறகு என்ன தெரிந்து சொல்லலாம். அல்லது முற்படலாம் ஆகவே கல் எறி விழுந்தாலும் திருமூலர் காலடியில் நின்று கொண்டு ஐயா நீர் அன்று அதைச் சொன்னீர். இன்று நானும் காணமுடியவில்லை. நீர் சொன்னதிற்காக அதை என் பத்திரிகையில் போட்டுட்டன். இதை நீர் மன்னித்துக் கொள்ளும் என்று இவ்வளவில் தூங்கிக் கண்டார் நிலை சொல்வதை நிறுத்திக் கொள்கிறேன்.

---

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் இருக்கும் இலங்கை மணி சைவநூற் பதிப்பகத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு வை. நல்லையா (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்) அவர்களால் புன்னாலைக் கட்டுவன் சைவநூற் பதிப்பகத்தின்... [partly obscured] ...த்தேனவிக்க அச்சகத்தில் பிரதிபண்ணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org